

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

மதிப்பீட்டுக் குழு

2011—2012

(பதினைந்தாவது பேரவை)

(1 முதல் 5 வரையிலான அறிக்கைகள்)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை-600 009.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2011-2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

''பொதுப்பணி (கட்டடங்கள்)'' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபதாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை

(பேரவைக்கு அளிக்கப் பெற்ற நாள் : 14 SEP 2011)

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை-600 009.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு
(2011-2012)

(பதினான்காவது பேரவை)

முதலாவது அறிக்கை

''பொதுப்பணி (கட்டடங்கள்)'' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபதாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை

11-163—1

பொருளடக்கம்

		பக்கங்கள்
மதிப்பீட்டுக் குழுவின் அமைப்பு (2011-2012)	..	iii
பாகம்–1 முன்னுரை	..	v
பாகம்–2 ''பொதுப்பணி (கட்டடங்கள்)'' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபதாவது அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை	..	1–14

இணைப்புகள்

இணைப்பு–1	துறையால் நிறைவேற்றப் பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்	..	15-32
இணைப்பு–2	பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றவை	..	33-39
இணைப்பு–3	துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெறவேண்டிய பரிந்துரைகள்	..	41-83

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு (2011-2012)

(2011 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது)

தலைவர்

1. திரு. பி.ஜி. நாராயணன்

உறுப்பினர்கள்

2. மாண்புமிகு திரு. ஒ. பன்னீர்செல்வம்
நிதி அமைச்சர் (அலுவல் காரணமாக)
3. திரு. ச. இராமச்சந்திரன்
தலைவர், பொதுக் கணக்குக் குழு (அலுவல் காரணமாக)
4. திரு. வி. சோமசுந்தரம்
தலைவர், பொது நிறுவனங்கள் குழு (அலுவல் காரணமாக)
5. திரு. எம். ஆறுமுகம்
6. திருமதி த. இந்திராகாந்தி
7. டாக்டர் க. கிருஷ்ணசாமி
8. திரு. ஆர். சாமி
9. திரு. ஆர். சுந்தர்ராஜன்
10. திரு. தங்கதமிழ்செல்வன்
11. திரு. ப. தன்சிங்
12. திரு. செ. தாமோதரன்
13. திரு. வ. நீலகண்டன்
14. திரு. அ. பாப்பாசுந்தரம்
15. செல்வி கே. பாலபாரதி
16. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
17. திரு. வி. மூர்த்தி
18. திரு. டி.ஆர்.பி. ராஜா
19. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

செயலகம்

திரு. அ.மு.பி. ஜமாலுதீன்	..	செயலாளர்
திரு. க. பாலசுப்பிரமணியன்	..	துணைச் செயலாளர்
திரு. க. சக்திவேலு	..	சார்புச் செயலாளர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மதிப்பீட்டுக் குழு

(2011–2012)

பாகம் 1

முன்னுரை

1. மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக இந்த அறிக்கை பேரவைக்கு அளிக்கப்படுகிறது.

2. இவ்வறிக்கை ''பொதுப்பணி (கட்டடங்கள்)'' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபதாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்து அளிக்கப்பெறும் அறிக்கையாகும்.

3. 2011-2012 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு 10–06–2011 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.

4. குழு 15–07–2011 அன்று சென்னையில் கூடி மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைப் பட்டியை ஆய்வு செய்தது.

5. மேற்கூறிய அறிக்கையில் குழு அளித்துள்ள 76 பரிந்துரைகளில் 19 பரிந்துரைகள் துறையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இவற்றின் விவரம் இணைப்பு–1 இல் பட்டியலிடப் பெற்றுள்ளன.

6. 7 பரிந்துரைகள் மீது துறை எடுத்த நடவடிக்கைகளை குழு ஏற்றுக் கொண்டுள்ளது. குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பெற்ற பரிந்துரைகள் பற்றிய விவரங்கள் இணைப்பு–2 இல் பட்டியலிடப் பெற்றுள்ளன.

7. இவ்வறிக்கையில் பாகம் 2–ல் தரப்பெற்றுள்ள காரணங்களுக்காக 50 பரிந்துரைகள் மீது துறை மேலும் நடவடிக்கை தொடரவேண்டுமென குழு முடிவு செயதுள்ளது. துறையால் மேலும் நடவடிக்கை தொடரப்பட வேண்டிய இனங்கள் இணைப்பு–3 இல் பட்டியலிடப் பெற்றுள்ளன.

8. 15–7–2011 அன்று சென்னையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இவ்வறிக்கைக்கு குழு ஒப்புதல் அளித்தது.

சென்னை 600 009,
நாள் 15–07–2011,
ஆனி 30,
திருவள்ளுவர் ஆண்டு-2042.

பி.ஜி. நாராயணன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பாகம்–2

அறிக்கை

''பொதுப்பணி (கட்டடங்கள்)'' குறித்து 2007–2008 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு (13–வது பேரவை) பேரவைக்கு அளித்த இருபதாவது அறிக்கையில் அடங்கியுள்ள பரிந்துரைகளின் மீது துறை எடுத்த நடவடிக்கைகள் மீதான குழுவின் அறிக்கை

1. பரிந்துரை எண்: 2 பத்தி எண்: 9

மேலும், வாழப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட நெடுஞ்சாலைத் துறையின் அனுமதியை விரைந்து பெறவும், காரியாப்பட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட வருவாய்த் துறையிலிருந்து பணி இடத்தினை விரைந்து பெறவும் மேற்படி இரண்டு அலுவலகக் கட்டடப் பணிகளை ஆரம்பிக்கவும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

வாழப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட, நெடுஞ்சாலைத் துறையின் அனுமதியை விரைந்து பெற்று, பின்பு வருவாய்த் துறையிடமிருந்து பணி இடத்தினை பெற துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காரியாப்பட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட, வருவாய்த் துறையிலிருந்து பணி இடம் பெறப்பட்டு விட்டது. பணியைத் துவக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

2. பரிந்துரை எண்: 9 பத்தி எண்: 25

மாவட்ட தலைமையிடங்களில் உள்ள விருந்தினர் மாளிகையின் தற்போதுள்ள இடவசதி பற்றிய ஒரு ஆய்வினை துறை மேற்கொண்டு, கூடுதல் அறைகள் / கூடுதல் தளம் அல்லது கூடுதல் கட்டடம் தேவைப்படுகிற இடங்களில் அவற்றை கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

மாவட்ட தலைமையிடங்களில் உள்ள விருந்தினர் மாளிகையின் தற்போதுள்ள இடவசதி பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிதி நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் குழுவின் பரிந்துரையின்படி அறைகள் / கூடுதல் தளம் அல்லது கூடுதல் கட்டடம் கட்டித்தரப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு மேற்படி பணிகளை முடிக்க துறை துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

3. பரிந்துரை எண்: 11 பத்தி எண்: 30

திருச்சி, கரூர், திருவாரூர், தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட தலைமையிடங்களில் உள்ள விருந்தினர் மாளிகைகளுக்கு முன்னுரிமை அளித்து கூடுதல் தளங்களோ அல்லது கட்டடங்களோ கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கையினை துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருச்சி, கரூர், திருவாரூர், தருமபுரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட தலைமையிடங்களில் உள்ள விருந்தினர் மாளிகைகளுக்கு முன்னுரிமை அளித்து கூடுதல் தளங்களோ அல்லது கட்டடங்களோ கட்டித் தருவதற்கு செயற்பொறியாளர்களிடம் கருத்துரு அனுப்பக் கோரப்பட்டுள்ளது. கருத்துரு கிடைக்கப் பெற்றவுடன் குழுவின் பரிந்துரைபடி அரசுக்கு அனுப்பி நிர்வாக ஒப்புதல் பெற்றவுடன் முன்னுரிமை அடிப்படையில் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறை பணிகளை முடிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

4. பரிந்துரை எண்: 12 பத்தி எண்: 33

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வனத் துறை ஒய்வு இல்லம் கட்டும் பணியை இதுவரை பொதுப் பணித் துறை செய்துள்ளது என்று அறிந்த குழு, தொடர்ந்து எஞ்சியுள்ள பணிகளையும் பொதுப்பணித்துறையே செய்து முடிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்ததிருந்தது

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வனத் துறை ஒய்வு இல்லம் கட்டும் பணியை இதுவரை பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு ரூ. 2,62,320/-க்கான பணி ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒப்பந்தக்காரருக்கு ரூ. 1,15,000/-மட்டுமே பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ. 1,47,320/- தொகை ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இதன் தொடர்பாக வனத்துறையினருக்கு 2001 ஆம் ஆண்டு முதல் இந்தாள் வரையிலும் பலமுறை கடிதம் அனுப்பப்பட்டும் வனத் துறையிடமிருந்து நிதி ஒதுக்கீடு வழங்கப்படாமல் உள்ளது. இந்நிலையில் ஒப்பந்ததாரர் தனக்கு சேரவேண்டிய ரூ. 1,47,320/- தொகையை கோரி நீதிமன்றத்தின் மூலம் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளார். எனவே ஒப்பந்ததாரருக்கு ஏற்கனவே வழங்கப்பட வேண்டிய பட்டியல் தொகை ரூ. 1,47,320/-ஐ உடன் மீதமுள்ள பணிக்கு தற்போதைய விலைப்புள்ளி விகிதப்படி ரூ. 7,50,000/-நிதி ஒதுக்கீடு வனத்துறையினரால் ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் குழுவின் பரிந்துரைப்படி பொதுப் பணித் துறையினரால் உடனடியாக இப்பணியை மேற்கொண்டு செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடித்துக் கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு பணியின் தற்போதைய நிலையை தெரிவிக்க துறையினை கோரலாம் என வலியுறுத்துகிறது.

5. பரிந்துரை எண்: 14 பத்தி எண்: 38

காஞ்சிபுரம் – வந்தவாசி சாலையில் வேறு பயணியர் விடுதி இல்லாத நிலையில் வீரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள பழைய விடுதி கட்டடத்தை இடித்து விட்டு புதியதாக பயணியர் விடுதி கட்டடம் கட்டித்தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

வீரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள பழைய விடுதி கட்டடம் கட்டட அமைப்பைச் சார்ந்தது அல்ல. இக்கட்டடம் நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்தது ஆகும். எனவே இப்பணிக்கான கருத்துரு நீர்வள ஆதார அமைப்பு மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு அரசிடமிருந்து நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்ற பின் குழுவின் பரிந்துரையின்படி இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு பொதுப் பணித் துறை (கட்டடம்) இப்பணியை நீர்வள ஆதார அமைப்பு மூலம் விரைந்து முடிப்பதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

(Letter No. AEET 12/39797/2006, dated 13-08-2007)

6. பரிந்துரை எண்: 15 பத்தி எண்: 41

வேலூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலை விரைந்து பெற்று சுற்றுலா மாளிகை கட்டப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

வேலூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு ரூ. 132.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு அரசிற்கு அனுப்பியுள்ளது. குழுவின் பரிந்துரையின்படி அரசின் நிர்வாக ஒப்புதலை விரைந்து பெற்றிட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு மதிப்பீடு ஒப்புதல் பெற்று துரித நடவடிக்கையினை துறை மேற்கொள்ள வேண்டுமென குழு வலியுறுத்துகிறது.

7. பரிந்துரை எண்: 16 பத்தி எண்: 42

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டடம் கட்டப்படுவதற்கான கருத்துரு மீதும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதலாக பல அடுக்கு மாடி கட்டடம் கட்ட 2008–09 விலை விகிதப்படி மதிப்பீடு ரூ. 6.60 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் அரசுக்கு அனுப்பி, ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் பணி மேற்கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணியை முடிப்பதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

8. பரிந்துரை எண்: 18 பத்தி எண்: 45

திருவாரூரில் கூடுதல் அரசு விருந்தினர் மாளிகை கட்டப்படுவதற்கான வரைபடத்தினை விரைந்து பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் விருந்தினர் மாளிகை கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருவாரூரில் கூடுதல் அரசு விருந்தினர் மாளிகை கட்டும் பணிக்கு உரிய துறையிடமிருந்து வரைபடம் பெற்று மதிப்பீடு தயாரித்து விரைந்து அனுப்பும்படி செயற்பொறியாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. கருத்துரு வரப்பெற்றதும் அரசிற்கு அனுப்பப்பட்டு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின் குழுவின் பரிந்துரையின்படி இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு நிர்வாக ஒப்புதல் பெற்று பணியை விரைவில் முடிப்பதற்கு துரித நடவடிக்கையை துறை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

9. பரிந்துரை எண்: 18 பத்தி எண்: 48

பொதுப் பணித்துறையின் மாவட்ட அளவிலான செயற்பொறியாளர்களுக்கு, குடியிருப்புகள் இல்லாத நாமக்கல் போன்ற மாவட்டங்களில் குடியிருப்புகள் கட்டித் தரப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பொதுப் பணித் துறையில் செயற்பொறியாளருக்கு, விருதுநகர், ஈரோடு, நாமக்கல், திருச்சி, கோவை, தூத்துக்குடி, மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்ட தலைநகரங்களில் குடியிருப்புகள் கட்ட ஒரு குடியிருப்பு ரூ. 18.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 144.00 இலட்சத்திற்கு கருத்துரு அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறையின் இப்பணியை நிறைவேற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

10. பரிந்துரை எண்: 19 பத்தி எண்: 52

உதகமண்டலம் ஸ்டோன் ஹவுஸ் ஹில் பகுதியில் உள்ள 60 முதல் 90 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட 253 அரசு அலுவலர் குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவற்றை இடித்து விட்டு புதியதாக குடியிருப்புகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

உதகமண்டலம் ஸ்டோன் ஹவுஸ் ஹில் பகுதியில் உள்ள 253 அரசு அலுவலர் குடியிருப்புகளுக்கான கருத்துரு செயற்பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், உதகமண்டலம் அவர்களிடமிருந்து பெற்றவுடன் அரசிற்கு அனுப்பப்பட்டு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின் குழுவின் பரிந்துரையின்படி மேற்படி பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இதன் மீது துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

11. பரிந்துரை எண்: 22 பத்தி எண்: 57

''நபார்டு'' நிதியுதவியில் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கருத்துருவின் மீது எடுக்கப்பட்ட முடிவு குறித்து குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் குழு விரும்புகிறது

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

''நபார்டு'' நிதியுதவியில் அனைத்துப்பள்ளி பணிகளையும் மேற்கொள்ள அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கருத்துருவின் மீது அரசு இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறை இப்பணியினை நிறைவேற்றிட தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

12. பரிந்துரை எண்: 23 பத்தி எண்: 61

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர் விடுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிக்கும் அமைப்பினை நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீட்டினை விரைந்து பெறுவதற்கு துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ / மாணவியர் விடுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிக்கும் அமைப்பினை நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீட்டினை அரசிடமிருந்து பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணியினை தூரிதமாக முடிக்க துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரை செய்கிறது.

13. பரிந்துரை எண்: 24 பத்தி எண்: 63

கரூர் மாவட்டம், புகளூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டித்தரப்படுவதற்கான நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித் துறை மேற்கொண்டு உரிய கருத்துருவினை பொதுப்பணித் துறைக்கு அனுப்ப வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இரு பணிகளையும் விரைவாக முடித்திட பொதுப் பணித் துறை பள்ளிக் கல்வித் துறையை தூரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

14. பரிந்துரை எண்: 26 பத்தி எண்: 68

திருச்சி அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதி கட்ட இடம் கிடைக்காத நிலையில், அந்தக் கல்லூரி வளாகத்திலேயே உள்ள இடத்தை பயன்படுத்தி விடுதியினை உடனடியாகக் கட்ட, சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

சட்டக்கல்வி இயக்குநர் அவர்களால் இடம் தேர்வு செய்யப்பட்டு பொதுப்பணித் துறைக்கு ஒப்படைக்கப் பட்டவுடன் தகுந்த மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு தடையாணையை நீக்க துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

15. பரிந்துரை எண்: 27 பத்தி எண்: 71

புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி, மீமிசல், கீரமங்கலம் மற்றும் ராயவரம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலப்பள்ளி மாணவர் விடுதிகள் கட்டப்பட இடம் தெரிவு செய்யப்பட்டு கட்டடம் கட்டப்படுவதற்குப் பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது குறித்தும், கட்டடப் பணிகளை துவங்கப்பட்டது குறித்தும், குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி, மீமிசல், கீரமங்கலம் மற்றும் ராயவரம் ஆகிய இடங்களில் விடுதிகள் கட்டுவதற்கான வில்லங்கமில்லா தளங்கள் (undisputed site) 18-06-08 வரை பயன்பாட்டுத் துறையினரால் ஒப்படைக்கப்படவில்லை.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணியை முடிப்பதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

16. பரிந்துரை எண்: 28 பத்தி எண்: 74

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் மற்றும் 10 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித் துறை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணிகளை துரிதமாக மேற்கொள்ள துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

17. பரிந்துரை எண்: 29 பத்தி எண்: 78

வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் ஒப்புதலை விரைவாக பெற்று வகுப்பறைகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் ஒப்புதல் (2007-08) பெறப்பட்டது. ஆனால் 2008-09 ஆம் ஆண்டு விலைவிகிதப்படி கட்டடம் கட்ட இயலாது என்பதால் அடுத்தவரும் கட்டத்தில் சேர்க்க பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணியினை விரைவில் முடிப்பதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

18. பரிந்துரை எண்: 31 பத்தி எண்: 80

வால்பாறை பகுதியில் யானைகள் மற்றும் வன விலங்குகளின் தொல்லை உள்ளதை கருத்திற் கொண்டு அப்பகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர் கட்டித்தருவதற்கான சாத்தியக் கூறினை பள்ளிக் கல்வித் துறை ஆராய வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு பள்ளிக் கல்வித் துறையினால் மேற்கொள்ளப்படும் பணியின் தற்போதைய நிலை தெரிவிக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.

19. பரிந்துரை எண்: 33 பத்தி எண்: 86

கோயம்புத்தூர் மாவட்டம், கொமாரலிங்கத்தில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்துதரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பயன்பாட்டுத் துறையினரிடமிருந்து எந்த கருத்துருவும் 18-06-2008 வரை கிடைக்கப் பெறவில்லை.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு பண்பாட்டுத் துறையை துரிதப்படுத்த கருத்துரு பெற்று இப்பணியை விரைவாக முடிக்க துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

20. பரிந்துரை எண்: 34 பத்தி எண்: 89

2005-2006 ஆம் ஆண்டிலேயே அனுமதி அளிக்கப்பட்டும் இடம் தெரிவு செய்வதில் உள்ள பிரச்சினை காரணமாக கட்டடம் கட்டப்படாமல் உள்ளது குறித்து குழு வருந்துகிறது. நீதிமன்ற தடை ஆணையை நீக்கி அல்லது மாற்றும் இடம் தெரிவு செய்து கட்டடம் கட்டப்பட துறை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 89)

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி கட்டுவதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கு கருத்துரு ஒப்புதல் வழங்க அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு கருத்துருவிற்கு ஒப்புதல் பெற்று இப்பணியை உடனடியாக துவக்கி முடிப்பதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

21. பரிந்துரை எண்: 36 பத்தி எண்: 93

வரும் கல்வியாண்டிற்குள் பணிகள் முடிக்கப்பட்டு புதிய கட்டடத்தில் வகுப்புகள் நடைபெறுவதை துறை உறுதி செய்ய வேண்டும் என்றும் இதுகுறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்கவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது. (பத்தி எண். 93)

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 28 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. பணியில் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. மேலும், இப்பணி 30-06-2008க்குள் முடிவுறும் என தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறை பணியின் தற்போதைய நிலவரம் தெரிவிக்க வலியுறுத்துகிறது.

22. பரிந்துரை எண்: 37 பத்தி எண்: 96

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதியதாக வகுப்பறையுடன் கூடிய இயற்பியல் ஆய்வுக்கூடமும் மற்றும் பள்ளியை பாதுகாக்க சுற்றுச்சுவரும் கட்டித்தரப்பட வேண்டும் என்றும், இது சம்பந்தமாக நடவடிக்கையினைப் பள்ளிக் கல்வித் துறை விரைந்து எடுக்கவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு சுற்றுச் சுவர் கட்டுவதற்கு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கிறது.

23. பரிந்துரை எண்: 38 பத்தி எண்: 97

மேற்படி ஆரணி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில் கூடைப்பந்து ஆடுகளம் விரைந்து அமைத்துத் தரப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு கருத்துரு ஒப்புதல் பெற்று பணியை துரிதப்படுத்த துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

24. பரிந்துரை எண்: 39 பத்தி எண்: 100

நீதிமன்ற நிறுத்திவைப்பு ஆணையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள, செய்யாறு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு மாற்று இடம் தெரிவு செய்வது குறித்து அரசுச் செயலாளர்கள் அளவில் கலந்துபேசி உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் விடுதிக் கட்டடம் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

விடுதி கட்டுவதற்கான தளம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறை துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

25. பரிந்துரை எண்: 40 பத்தி எண்: 103

வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கீ.வி.குப்பம் என்ற இடத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக் கட்டுவதற்கு இடம் தெரிவு செய்தும் சோளிங்கரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக் கட்டுவதற்கு மாற்று இடம் தெரிவு செய்தும் அந்த இடங்களை பொதுப்பணித்துறைபிடம் விரைவாக ஒப்படைக்க, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

கீ.வி.குப்பம் பதிலாக ஆற்காடு என்ற இடத்தில் விடுதி கட்டுவதற்கான ஒப்பந்தபுள்ளி (Tender) கோரப்பட்டுள்ளது. சோளிங்கருக்கு பதிலாக ரண்டாடி என்ற இடம் தெரிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. இடம் ஒப்படைக்கப்படவில்லை.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இதன் தற்போதைய நிலவரம் தெரிவிக்கவும். துறை மேலும் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

26. பரிந்துரை எண்: 41, பத்தி எண்: 106.

நாகப்பட்டினம் மாவட்டம், காளியில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்டுவதற்கு அரசின் திருத்திய நிர்வாக ஒப்புதலை விரைவாகப் பெற்று, ஒரு மாத காலத்திற்குள் மேற்படி விடுதி கட்டடப் பணிகள் துவங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

காளியில், பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுவதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கு கருத்துரு ரூ. 47.60 லட்சத்திற்கு ஒப்புதல் வழங்க அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு நிர்வாக ஒப்புதல் பெற்று துறை துரித நடவடிக்கை எடுத்து இப்பணியை முடித்திட வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

27. பரிந்துரை எண்: 42, பத்தி எண்: 109.

திருத்துறைப் பூண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட இடம் தெரிவு செய்வதில் உள்ள இடர்பாடுகளைக்களைய மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்பட வேண்டுமென்றும், இக்கட்டடம் விரைவாக கட்டித்தரப்படவேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இதன் மீது துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

28. பரிந்துரை எண்: 43 பத்தி எண்: 112

பெரம்பலூர் மாவட்டம், குரும்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டித் தரப்படுவதற்கான நடவடிக்கைகளைப் பள்ளிக் கல்வித்துறை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது.

பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு கருத்துருவினை அத்துறையிடமிருந்து பெற்று தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது.

29. பரிந்துரை எண்: 45 பத்தி எண்: 116

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொரப்பூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமியணஹள்ளி அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொ. மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பயர்நத்தம், மெனசி, காளிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அதிகாரப்பட்டி உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்கு தளவாட சாமான்களுடன் போதுமான வகுப்பறை கட்டடங்கள், சுற்றுச்சுவர், குடிநீர் ஆகிய வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது.

தருமபுரி மாவட்டத்தில் பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொ. மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு வங்கி நிதி உதவியுடன் கட்ட கட்டடம் 8 (Phase VIII)ல் ஒப்புதல் பெற இடம் பெற்றுள்ளது. மற்றப் பள்ளிகளுக்கு பள்ளி கல்வித் துறையிடமிருந்து கருத்துரு பெறப்பட்டப்பின் மதிப்பிடு தயாரித்து உரிய நிதி ஒதுக்கிடு பெற்றப்பின் செயல்முறைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணிகளை துரிதமாக முடித்திட துறை விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

30. பரிந்துரை எண்: 48 பத்தி எண்: 125

பராமரிப்பு நிதி என்றால் அது பொதுவாக அனைத்து அரசு கட்டடங்களையும் பராமரிக்க என்ற அளவில் இருக்கும். எனவே பாரம்பரியமிக்க கட்டடங்களைப் பராமரிக்க என்று தனிக் கணக்குத் தலைப்பின்கீழ் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, அக்கட்டடங்களைப் பராமரிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது.

பராம்பரிய கட்டங்களை பராமரிக்க தனித்தலைப்பின்கீழ் தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நிதித் துறை மட்டத்தில் முடிவு செய்தால், அக்கட்டடங்களை சிறப்பாக பராமரிக்க இயலும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

31. பரிந்துரை எண்: 49 பத்தி எண்: 128

சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் பழமையானதாக உள்ளதால் அதனை இடித்து விட்டு, அந்த வளாகத்தில் போதுமான நிலம் இருப்பதால், அவ்வளாகத்திற்குள் நடுவர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை அமையும் வண்ணம் விரைவில் ஒருங்கிணைந்த புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட வேண்டு மென்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

சீர்காழியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு வரைபடம் மற்றும் தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூ. 176.10 லட்சத்திற்கு சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் அவர்களால் 3-2-2004ல் அரசின் நிர்வாக ஒப்புதல் பெற அரசிற்கு அனுப்பப்பட்டது, தற்போது இந்த மதிப்பீடு தேசிய நீதிமன்ற கட்டட வடிவமைப்பின்படி வரைபடத்தை திருத்தியமைத்து மதிப்பீடு தயார் செய்யக் கேட்டு 3/08-ல் சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் அவர்களால் இவ்வலுவலகத்திற்கு திருப்பப்பட்டுள்ளது. தலைமைக் கட்டடக் கலைஞர் அவர்களால் வரைபடம் தயாரிக்கப்பட்டவுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் பெற சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளர் மூலமாக அரசிற்கு அனுப்பப்படும், அரசின் நிர்வாக ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் பணிதுவங்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணிகளை துவக்கி விரைவில் முடித்திட குழு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது

32. பரிந்துரை எண்: 50 பத்தி எண்: 131

குடியாத்தம் சார்பு நீதிபதி மற்றும் குற்றவியல் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டப் படுவதற்கான ரூ. 44.81 இலட்சம் திருத்திய மதிப்பீட்டின்மேில் நிதி ஒதுக்கிடு செய்யப்ப வேண்டுமென்றும், குடியிருப்புகள்விரைவில் கட்டித்தரப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

குடியாத்தம் சார்பு நீதிபதி மற்றும் மாவட்ட முன்சீப் குடியிருப்புகள் கட்டப்படுவதற்கான புதிய வரைபடத்தின் படி 2008-09-ம் செந்தரப்பட்டியல் (Schedule of Rates) விலைவிகிதப்படி திருத்திய மதிப்பீடு (revised estimate) ரூ.54.60 இலட்சத்திற்கு அரசின் திருத்திய ஆட்சி ஒப்பளிப்பு பெற்றுத்தரக்கேட்டு இவ்வலுவலக கடித எண் உசெபொ./.17/44909A/2000, நாள் 16-6-2008-ல் செயலர், உள்துறை சென்னை-9-க்கு அனுப்பப்பட்டுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு துறை நினைவூட்டுகள் அனுப்பி பணியினை துரிதப்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது. *Lr. No. AEE/T.17/4180A/2000, dated: 16-6-2008.*

33. பரிந்துரை எண்: 52 பத்தி எண்: 137

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் வட்டாரத் துணைப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தரப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பெற வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது.

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் வட்டாரத் துணைப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணிக்கு போக்குவரத்துத் துறையிடமிருந்து கருத்துரு ஏதும் பெறப்படவில்லை. கருத்துரு பெறப்பட்டப்பின் உரிய விரிவான மதிப்பீடு தயாரித்து போக்குவரத்து துறையின் மூலம் அரசிற்கு அனுப்பப்பட்டு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்ட பின் குழுவின் பரிந்துரையின்படி இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துரித நடவடிக்கையை துறை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது. *Lr. No. AEE/T.12/43110/2001, dated 25-3-2008.*

34. பரிந்துரை எண்: 54 பத்தி எண்: 143

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சிறு கருத்தரங்கு கூடம் (Mini Conference Hall) கட்டப்படவும், மின்தூக்கி (Lift) வசதி அமைக்கப்படவும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

2008-09 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின்கீழ் மேற்படி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மின் தூக்கி மற்றும் மின்தூக்கி அறை அமைக்க அரசு அரசாணை (நிலை) எண் 308, வருவாய் (வ.நி.2 (1) துறை, நாள்: 28-5-2008-ல் ரூ. 24.00 இலட்சத்துக்கு நிதி ஒப்பளிப்பு செய்ததன் அடிப்படையில், பணி மேற்கொள்ளவுள்ளது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்ட சிறு கருத்தரங்கு கூடத்துக்கு அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் பணி செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணியை விரைவில் முடித்திட பரிந்துரை செய்கிறது.

35. பரிந்துரை எண்: 55 பத்தி எண்: 146

திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு நவீன தளவாடச் சாமான்கள் வழங்கப்பட வேண்டுமென்றும் பிரிவுகள் Cubicle அமைப்பில் நிறுவப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு furniture க்காக ரூ. 36.00 இலட்சம் மதிப்பீடு மாவட்ட ஆட்சியரால் தயாரிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு உள் அழகுப்படுத்துவதுடன் நவீன தளவாடச் சாமான்கள் ஆகியவற்றுக்காக 2007/2008-ல் ரூ. 249.00 இலட்சம் தோராய மதிப்பீடு மாவட்ட ஆட்சியர் ஒத்திசைவுடன் தயாரிக்கப்பட்டு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5 வழியாக நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் பெறும் பொருட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் பணி செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணிகளை விரைவில் முடித்திட துறை ஆரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

அரசு ஆணை (நிலை) எண் 308, வருவாய் துறை, நாள் 26-5-2008.

36. பரிந்துரை எண்: 57, பத்தி எண்: 150

உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகப் பழைய கட்டடத்தை இடித்து விட்டு, புதியதாக கட்டடம் கட்டப் படுவதற்கான மதிப்பீட்டிற்கு அரசின் ஒப்புதலை விரைந்து பெற்றுமேற்படி கட்டடம் கட்டித் தரப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

உடுமலைப்பேட்டையில் பழைய வட்டாட்சியர் அலுவலகத்தை இடித்துவிட்டு, புதியதாக கட்டுவதற்கு 2005-2006-ல் ரூ. 115.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5 வழியாக அரசுக்கு நிர்வாக நிதி ஒப்புதல் பெறும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும் பணி செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும் மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கூடுதல் கட்டடத்தில் முதல் தளம் கட்டவும் பதிவு அறையை நீட்டிப்பு செய்யவும் இவ்வருடம் (2008-2009) பகுதி II திட்டத்தின் கீழ் அரசு, அரசாணை எண் 306 வருவாய் துறை, நாள்: 26-5-2008-ல் ரூ. 25.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பணி விரைவில் செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை துறை நிறைவேற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பரிந்துரை செய்கிறது. (அரசு ஆணை (நிலை) எண் 306, வருவாய்த் துறை, நாள்: 26-5-2008.

37. பரிந்துரை எண்: 58 பத்தி எண்: 153

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் வலையப்பட்டி அரசு மருத்துவமனைகளை மேம்படுத்தும் பணிகள் 31-3-2008-க்குள் முடிக்கப்படவில்லையென்றால் ஒப்பந்தாரர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துப் பணிகள் நிர்ணயித்தக் காலக் கெடுவிற்குள் முடிக்கப்படுவதை துறை உறுதி செய்யப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

31-03-08-க்குள் பணிகள் முடிப்பதற்கு கால கெடு நீட்டிக்கப்பட்டிருந்தாலும் கூட பிப்ரவரி & மார்ச் 08ல் எதிர்பாரா வண்ணம், பருவம் தவறி பெய்த மழையால் குறிப்பாக தென் மாவட்டங்களில் பெய்த தொடர்மழை, புதுக்கோட்டை மாவட்டத்திலும் பெய்தபடியால் பணிகள் முற்றிலும் பாதிப்படைந்தது. மேலும் கட்டுமானன பொருட்கள் விலை அம்மாதங்களில் பல மடங்கு அதிகரித்த காரணத்தால் அவற்றை கேகரிப்பதில், தேக்கநிலை ஏற்பட்டது. மேற்கூறிய காரணங்களால் 31-3-2008க்குள் இப்பணிகளை முழுமையாக முடிக்க இயலவில்லை. இருப்பினும் ஒப்பந்தக்காரருக்கு பணியின் தேக்க நிலை குறித்து தெரிவித்து மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அதன்படி கூரைப்பணிகள் முடிவுற்று இறுதிக் கட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 30-6-08-க்குள் பணிகள் முடிப்பதற்கு ஒப்பந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு இப்பணிகளை துரிதமாக முடித்திட துறை நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

38. பரிந்துரை எண்: 59 பத்தி எண்: 156.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனைக் கட்டடத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்யவும் கழிவு நீர் செல்ல வசதி செய்து தரப்படவும் குளிர்சாதன வசதியுடன் கூடிய சவக்கிடங்கு அமைத்துத் தரவும் இம்மருத்துவமனை மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திலேயே தங்கக்கூடிய வகையில் குடியிருப்புகள் கட்டித் தரப்படவும் தேவையான கருத்துருக்களை பொதுப்பணித் துறைக்கு அனுப்பி வைக்க இயக்குநர், மருத்துவம், ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நலம், சென்னை அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருமயம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை கட்டிடங்களின் பழுது பார்க்கும் பணிகளுக்காக "2059 M&R மருத்துவமனை என்ற கணக்கு தலைப்பில் 2007–2008ம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 2.25 இலட்சத்தில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை கட்டிடங்களில் உள்ள பழுதுகள் சீர் செய்யும் பணிகளுக்கும் ரூ. 0.75 இலட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் செல்ல வசதி அளிக்கும் பணிகளுக்கும் செய்து தரப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இது தவிர தற்போதுள்ள மருத்துவர் குடியிருப்புகளை பழுது பார்ப்பதற்காக ரூ. 9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெற்றுதர இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் புதுக்கோட்டை அவர்களுக்கு, புதுக்கோட்டை செயற்பொறியாளாரால் அவரது கடித எண் 678 எம் கோ 13/பா1 நாள்: 26–09–2007 மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றிற்காக மருத்துவ துறையிடமிருந்து ஒப்புதலோ, நிதி ஒதுக்கீடோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நிதி கிடைக்கப் பெற்றவுடன் மருத்துவர் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் குளிர் சாதன வசதியுடன் கூடிய சவகிடங்கு அமைத்து தருவதற்கும், மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திலேயே தங்கக் கூடிய வகையில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு தேவையான கருத்துரு இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் சென்னை–6 அவர்களிடமிருந்து இதுவரை பெறப்படவில்லை. பெறப்பட்ட பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை முடித்திட துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

39. பரிந்துரை எண்: 60, பத்தி எண்: 158

புதிய குடியிருப்புகள் கட்டித்தரப்படும் வரையில் தற்போதுள்ள குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், போதிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருமயம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை கட்டிடங்களின் பழுது பார்க்கும் பணிகளுக்காக "2059 M&R மருத்துவனை என்ற கணக்கு தலைப்பில் 2007–08ம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 2.25 இலட்சத்தில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை கட்டிடங்களில் உள்ள பழுதுகள் சீர் செய்யும் பணிகளுக்கும் ரூ. 0.75 இலட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் செல்ல வசதி அளிக்கும் பணிகளுக்கும் செய்து தரப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக்க கொள்ளப்படுகிறது.

இது தவிர தற்போதுள்ள மருத்துவர் குடியிருப்புகளை பழுது பார்ப்பதற்காக ரூ. 9.50 இலடசத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெற்றுதர இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் புதுக்கோட்டை அவர்களுக்கு, புதுக்கோட்டை செயற்பொறியாளரால் அவரது கடித எண் 678 எம் /கோ 13/பா1, நாள்: 26–09–2007 மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றிற்காக மருத்துவ துறையிடமிருந்து ஒப்புதலோ, நிதிஒதுக்கீடோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நிதி கிடைக்கப் பெற்றவுடன் மருத்துவர் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும் குளிர் சாதன வசதியுடன் கூடிய சவகிடங்கு அமைத்து தருவதற்கும், மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திலேயே தங்கக் கூடிய வகையில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு தேவையான கருத்துரு இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் சென்னை–6 அவர்களிடமிருந்து இதுவரை பெறப்படவில்லை, பெறப்பட்ட பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை செயல்படுத்திட துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

40. பரிந்துரை எண்: 64, பத்தி எண்: 169

கோயம்புத்தூர் அரசு பொது மருத்துவமனை ஆரம்பித்து 99 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மிகவும் மோசமான நிலையில் உள்ள பழைய கட்டடங்களை இடிக்கவும் அம்மருத்துவ மனைக்குத் தேவைப்படும் கட்டடங்கள் குறித்து ஒரு ஆய்வினை மேற்கொண்டு அவற்றை கட்டித் தருவதற்கும் தகுந்த நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

செவிலியர் கல்லூரி கட்டுவதற்கான போதுமான இடம் தற்போது மருத்துவமனை வளாகத்தில் இல்லை எனவும் மாற்று இடம் தெரிவு செய்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.

75 மகளிர் மற்றும் 75 சீ.ஆர்.ஆர்.ஐ மாணவர்கள் தங்கும் விடுதி மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடம் ஆகியவற்றுடன் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டபின்பு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை துறை தாமதமாக முடித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கிறது.

41. பரிந்துரை எண்: 65, பத்தி எண்: 170

மேலும் கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் அரசு மருத்துவமனையில் உள்ள புறநோயாளிப் பகுதிக் கட்டடம் கட்டப்பட்டு 70 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் அதற்கு புதியதாக கட்டடம் கட்டித் தரப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது.

கோட்டூர் அரசு மருத்துவமனையின் புற நோயாளிப் பகுதிக் கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீடு தலைமை கட்டடக் கலைஞர் அவர்களிடம் மாதிரி வரைபடம் பெற்று விரைவில் தயார் செய்து நிர்வாக ஒப்புதலுக்காக இயக்குநர் மருத்துவதுறை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

42. பரிந்துரை எண்: 66, பத்தி எண்: 173.

உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை விரிவாக்கம். புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புப் பணிகளை விரைவில் மேற்கொண்டு அவை முடிக்கப்பட வேண்டும் என்றும் இது குறித்து குழுவிற்கு தெரிவிக்கவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டடம் (க&ப) வட்டம் ஈரோடு அவர்களால் மறு ஒப்பந்தப்புள்ளிகோரப்படவுள்ளது. ஒப்பந்தக்காரர் இறுதி செய்யப்பட்டவுடன் பணிகள் விரைவில் செய்து முடிக்க ஆவன செய்யப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறது.

43. பரிந்துரை எண்: 67, பத்தி எண்: 176

உடுமலைப்பேட்டை அரசு பொதுமருத்துவ மனையில் கூடுதலாக பிரசவ வார்டு ஒன்றும் 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்றும் கட்டித்தரப்படுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளை பெற்று விரைவில் இறுதி செய்து மேற்படி கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது.

கண்காணிப்புப்பொறியாளரால் மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்படவுள்ளது. ஒப்பந்தக்காரர் முடிவு செய்தவுடன் பணிகள் செய்து முடிக்க ஆவன செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

44. பரிந்துரை எண்: 68, பத்தி எண்: 177

மேலும், இம்மருத்துவமனையில் உள்ள ஆண்கள் சிகிச்சைப் பகுதியை விரிவாக்கம் செய்யவும், மற்றும் இரத்த வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டித்தரவும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

கண்காணிப்புப்பொறியாளரால் மறு ஒப்பந்தப் புள்ளி கோரப்படவுள்ளது. ஒப்பந்தக்காரர் முடிவு செய்தவுடன் பணிகள் செய்து முடிக்க ஆவன செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

45. பரிந்துரை எண்: 69, பத்தி எண்: 180

திருப்பூர் நகரம் ஒரு வளர்ந்துவரும் நகரம் என்பதுடன் தற்போது மாநகராட்சியாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளதால், அங்குள்ள அரசு தலைமை மருத்துவமனைக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய மருத்துவமனை கட்டடம் விரைவில் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருப்பூர் அரசு மருத்துவ மனையில் 50 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனை கட்டுவதற்கு உலக வங்கி நிதி மூலம் கட்டுவதற்கு ரூ. 155.00 லட்சங்களுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டது. எவரும் ஒப்பந்த அழைப்பில் கலந்து கொள்ளாததால் மறு ஒப்பந்த அழைப்பு கோரப்படவுள்ளது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

46. பரிந்துரை எண்: 70, பத்தி எண்: 183

திருப்பூர் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டடம் மற்றும் தங்கும் விடுதிக் கட்டடம் ஆகியவை உடனடியாகக் கட்டித்தரப்படவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

இப்பணிக்கான மாதிரி வரைபடம் தலைமை கட்டடக் கலைஞர் அவர்களால் தயார் செய்யப்பட்டு, இயக்குநர், மருத்துவ கல்வி இயக்ககம், சென்னை–10 அவர்களின் ஒப்புதல் பெரும்பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் விபர வரைபடம் தயார் செய்து அரசின் நிர்வாக ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

47. பரிந்துரை எண்: 71, பத்தி எண்: 186

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர், கோவிலூர், வீரம்பாக்கம் மற்றும் ஆக்கூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊருக்கு வெளியே பாதுகாப்பு இல்லாமல் அமைந்துள்ளதால் அவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச்சுவர் விரைவாக கட்டித்தர வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனக்காவூரில் துணை சுகாதார நிலையம் மட்டுமே உள்ளது. இக்கட்டிடத்திற்கு ஏற்கனவே சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது. மற்றைய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அதாவது, வீரம்பாக்கம், ஆக்கூர் மற்றும் கோவிலூர் கிராமங்களில் உள்ள சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டும். இதற்கான தோராய மதிப்பீடு முறையே 4.50 இலட்சம், 9.00 இலட்சம் மற்றும் 5.00 இலட்சங்களுக்கு தயாரித்து துணை இயக்குநர், செய்யார் அவர்கள் மூலமாக இயக்குநர், சுகாதார துறைக்கு அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறது.

48. பரிந்துரை எண்: 73, பத்தி எண்: 192

வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வார்டு கட்டும் பணியில் உள்ள நிகர சேமிப்பு தொகையிலிருந்து (ரூ. 1,41,00,000) அம்மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர், வாகனங்கள் நிறுத்துமிடம், சிற்றுண்டி விடுதி, வளாகத்திற்கு முன்புறம் கான்க்ரீட் சாலை மற்றும் மருத்துவமனை முன்புறம் வளைவு முகப்பு ஆகியவை அமைத்துதர அரசின் இசைவினை பெற்று விரைவாக அவற்றை செய்து முடிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை அரசினர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் குழு பரிந்துரைத்துள்ள பணிகள் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் துவங்கப்படும் எனவும், இது குறித்து மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10 அவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கிறது.

49. பரிந்துரை எண்: 74, பத்தி எண்: 193

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் பயிந்தம் மற்றும் கடத்தூர் ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதாகக் குழு அறிந்தது. அம் மருத்துவமனைகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் பயிந்தம் மற்றும் கடத்தூர் ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது. இவற்றிற்கு சுற்றுச் சுவர் கட்ட மூலமதிப்பீட்டில் ஒதுக்கீடு இல்லை. எனவே, இதற்கான மதிப்பீடு தனியே தயாரித்து அரசின் நிர்வாக ஒப்பளிப்பு பெற்று சுற்றுச்சுவர் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கிறது.

50. பரிந்துரை எண்: 75, பத்தி எண்: 194

மேற்படி பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் பொ. மல்லாபுரம், பூதநத்தம், முக்காரெட்டிப்பட்டி, இராமியணஹள்ளி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

இதற்கு துறை பின்வருமாறு பதிலளித்திருந்தது

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் பொ. மல்லாபுரம், பூதநத்தம், முக்காரெட்டிப்பட்டி, இராமியணஹள்ளி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இவற்றில் பூதநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச் சுவர் செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட மதிப்பீடு தயாரித்து அரசின் நிர்வாக ஒப்பளிப்பு பெறும் பொருட்டு துணை இயக்குநர், சுகாதார பணிகள் தருமபுரி அவர்கள் மூலமாக இயக்குநர் சுகாதாரதுறைக்கு அனுப்பி அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துறையின் பதிலை ஆய்வு செய்த குழு குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை துரித நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டுமென பரிந்துரை செய்கிறது.

சென்னை–600 009,
நாள்: 15–07–2011,
ஆனி 30,
திருவள்ளுவர் ஆண்டு-2042.

பி.ஜி. நாராயணன்,
தலைவர்,
மதிப்பீட்டுக் குழு.



இணைப்பு-I

துறையால் நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்

இணைப்பு–1.

துறையால் நிறைவேற்றப்பெற்றதாகக் கருதப்பெற்ற பரிந்துரைகள்

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	1	8	42 பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகள் கட்டுவதற்கான பணி இடங்களை பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையிலிருந்து விரைந்து பெற்று கட்டடப் பணிகளை உரிய காலத்தில் முடித்திட துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	மொத்தம் உள்ள 50 விடுதிகள் கட்டும் பணிகளில் 8 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 18 விடுதிகள் பணிகள் நடைப்பெற்று வருகின்றன, 6 விடுதிகளுக்கு அரசிடமிருந்து திருத்திய மதிப்பீடு ஒப்புதல் பெற நடவடிக்கையில் உள்ளது. 14 இடங்களுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. 4 இடங்களுக்கு விரைவில் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பணித்தளம் விரைந்து ஒப்படைக்க இத்துறையினால் தூரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் பணித்தளம் பெறப்பட்டு பணிகள் துவங்க தூரித நடவடிக்கை எடுக்கப்படும்.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	3	11	நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ள வழக்கினை விரைவுபடுத்தி, தீர்ப்பினை பெற்று விழுப்புரம் புதிய மருத்துவக் கல்லூரி கட்டடத்தினைக் கட்டிமுடிக்க துறை, தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
விழுப்புரம் புதிய மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக நீதி மன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கின் மீது அரசுக்கு சாதகமாக சென்னை உயர்நீதி மன்றம் 09.09.08 அன்று தீர்ப்பு வழங்கியது, மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப் புள்ளிகள் 07.10.08 அன்று பெறப்பட்டு, துறை நடவடிக்கைக்கு பின் பணிகள் நடைபெற்று வருகின்றன என தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	10	28	கடலூர், தூத்துக்குடி, குடியாத்தம் மற்றும் அருப்புக்கோட்டையில் கூடுதல் சுற்றுலா மாளிகை மற்றும் ஆய்வு மாளிகை கட்டும் பணிக்கு விரைவாக நிதி ஒதுக்கீடு பெற்று 2008–2009 ஆம் ஆண்டிற்குள்ளாகக் கட்டி முடிக்கப்பட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	கடலூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் சுற்றுலா மாளிகை கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. 2009–10 ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும். குடியாத்தம் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் ஆய்வு மாளிகை கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
4	13	36	புதியதாக கட்டப்பட்டுவரும் சேலம் கூடுதல் ஆய்வு மாளிகையின் முன்பக்க விரிவாக்கப்பணி மற்றும் சாலை வசதி ஆகியவை உள்ளிட்ட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டது குறித்து குழுவிற்கு அறிக்கை ஒன்று அளிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	சேலம் கூடுதல் ஆய்வு மாளிகையின் முன்பக்க அணுகுமுறை சாலை அவைகளின் மதில் சுவர் கட்டும் வண்டி கொட்டகையுடன் கூடிய ஒட்டுநர்கள் மற்றும் பாதுகாவலர் ஒய்வறை அமைத்தல் மற்றும் 8 நபர்கள் பயணிக்கக் கூடிய மின் தூக்கி அமைத்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது அரசாணையின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	20	53	புதிய குடியிருப்புகள் கட்டப்படுவதற்கு அரசின் ஒப்புதல் பெறப்படும்வரை தற்போது உள்ள குடியிருப்புகளுக்கு சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் செய்யப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
2008–09 ஆம் நிதியாண்டில் உதகை பராமரிப்பு உபகோட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்ட அரசு குடியிருப்புகளின் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள 95.40 இலட்சம் நிதி ஆதாரம் பெறப்பட்டது. ஸ்டோன் ஹவுஸ் ஹில் பகுதியில் அமைந்துள்ள 253 அரசு குடியிருப்புகளில் 123 குடியிருப்புகள் 2008–09 நிதியாண்டில் பழுது நீக்கம் செய்ய செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 1) 40 குடியிருப்புகளில் மேற்கூரை பழுது நீக்கம் செய்து வெள்ளை அடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2) 52 குடியிருப்புகளுக்கு மேற்கூரை செப்பனிடுதல் கழிவறை மற்றும் குளியலறை சீர் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய பணிகள் தவிர்த்து ஸ்டோன் ஹவுஸ் ஹில் பகுதியில் அமைந்துள்ள 253 குடியிருப்புகளுக்கு ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் தொட்டியும் அதற்கு சில பைப்லைன் மற்றும் பொது கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 130 குடியிருப்புகளுக்கு பழுது நீக்கம் பணி மேற்கொள்ள நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	25	65	பொதுப்பணித்துறை, பராமரிப்புக்காக கணக்கு எடுக்கும்போது, ஆபத்தான, இடிந்து விழும் நிலையில் உள்ள பள்ளிக் கட்டடங்களை மாநிலம் முழுவதும் கணக்கெடுத்து அவற்றை இடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அரசாணை எண். 165 பொ.ப.து. (ஜி2) துறை நாள் 22.05.2008–ன்படி பள்ளிக் கல்வி இயக்குநர் சென்னை மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரால் பரிந்துரைக்கப்படும் இடித்து அப்புறப்படுத்த வேண்டிய பள்ளிக் கட்டடங்களை இடிப்பதற்கு செயற்பொறியாளர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	30	79	மேலும் இப்பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டப்படுவதற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற பள்ளிக் கல்வித் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	வால்பாறை அரசு மேல்நிலைப்பள்ளியில் சுற்றுச்சுவர் 1000 மீட்டர் நீளத்திற்கு கட்டும்பணி தற்போது நடைபெற்று வருகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
8	32	83	குழு நேரில் சென்று பார்வையிட்டதில், உடுமலைப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்குக் கூடுதலாக வகுப்பறைகள் தேவை என்பதை அறிந்ததன்பேரில் அப்பள்ளிக்கு 8 வகுப்பறைகள் கூடுதலாகக் கட்டித்தருவதற்கு பள்ளிக் கல்வித் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	உடுமலைப்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு நபார்டு திட்டம் கட்டம் 1ல் 12 வகுப்பறைகள் கட்டடம் கட்டி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் கூடுதல் வகுப்பறைகளும் பற்றிய கருத்துரு பள்ளிக்கல்வித் துறை மூலம் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	44	115	பெரம்பலூர் மைய நூலகத்திற்கு, அதற்கான கட்டடம் கட்டப்படுவதற்கான நிதியில் கிடைக்கும் சேமிப்பிலிருந்து சுற்றுச் சுவர் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு விரும்புகிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பெரம்பலூரில் மைய நூலகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. அதில் கிடைக்கும் சேமிப்புத் தொகையிலிருந்து சுற்றுச்சுவர் கட்டும் பணி முடிக்கப்பட்டு உரிய துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. (அரசாணை எண் 165, பொதுப்பணி (ஜி–2) துறை, நாள்: 22–5–2008.)	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	46	119	சென்னை, அருங்காட்சியகத்தில் உள்ள அமராவதி கலைக் கூடம் கட்டடத்தினைப் புதுப்பிக்கும் பணி விரைந்து முடிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சென்னை, அருங்காட்சியகத்தில் உள்ள அமராவதி கலைக் கூடம் கட்டடம் அரசாணை எண். 22 தமிழ் வளர்ச்சி மற்றும் கலாச்சாரத்துறை நாள் 4.2.2005ல் வெளியிடப்பட்டது. தற்போது 30.6.2009–க்குள் பணிகள் நிறைவுறும்.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
11	47	122	சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் மின்னொளி அமைக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்து விரைவில் அப்பணி செய்து முடிக்கப்பட வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் மின்னொளி அமைக்கும் பணி (ரூ.30.00 இலட்சத்தில்) அரசாணை எண். (ID) 69 பொதுப்பணி (கட்டடங்கள்) துறை நாள் 26.04.2007ல் ஆணையிடப்பட்டது தற்போது பணி நிறைவு பெற்றது எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. (G.O.ID.No. 69, Public, (Buildings) Department, Dated: 26-4-2007.)	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	51	134	புதிதாக கட்டப்பட்டுவரும் திருச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சுற்றுச்சுவர் மற்றும் போக்குவரத்து அலுவலகத்தைச் சுற்றி தண்ணீர் தேங்காமல் வடிந்தோட, மண் நிரப்புதல் போன்ற பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. 2009/10 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும் எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	53	140	நீதிமன்ற தடையாணையை நீக்க விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் மண்டலப் போக்குவரத்து அலுவலகம் விரைவில் கட்டப்பட வேண்டும் என்றும் இதுகுறித்து அறிக்கை ஒன்று குழுவிற்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	திருப்பூர் மண்டல போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணிக்கு மாற்றாக செங்குன்றத்தில் போக்குவரத்து அலுவலகம் கட்ட அரசாணை எண். 397 உள் போக்குவரத்து–7 துறை நாள் 15.05.09 பெறப்பட்டுள்ளது. அதற்கான உரிய மதிப்பீடு பெறப்பட்டு பரிசீலனை உள்ளது விரைவில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அரசாணை எண்.397 நாள் 15.05.09 இணைக்கப்பட்டுள்ளது. [அரசாணை (நிலை) எண் 397, உள் (போக்குவரத்து–7) துறை, நாள்: 15–5–2009.]	குழுவின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
14	56	147	கட்டடங்கள் புதியதாகவும் நவீனமாகவும் இருக்கையில் மேசை, நாற்காலி போன்ற தளவாடச் சாமான்களும் புதியதாக இருந்தால்தான் நேர்த்தியாக இருக்கும் என குழு கருதுகிறது. எனவே, அரசு கட்டடங்கள் புதியதாக கட்டப்படும்போது அந்தக் கட்டடத்தில் இயங்கவுள்ள அரசு அலுவலகங்களுக்குப் புதியதாக தளவாடச் சாமான்கள் (Furniture) வழங்கப்பட வேண்டும் என்றும் பிரிவுகள் தனியார் நிறுவனங்களைப்போல் (Cubicle) அமைப்பில் நிறுவப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	குழு பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படுகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	61	161	தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ரூ.27.75 கோடி மதிப்பீட்டில் புற நோயாளிப் பிரிவு கட்டடம் மற்றும் 500 படுக்கைகள் கொண்ட 'வார்டு' கட்டடம் கட்டும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் புற நோயாளிப் பிரிவு மற்றும் 500 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டடம் கட்டும் பணிகள் 90% முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிக்கான திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ. 18.55 கோடிக்கு, சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருத்திய நிர்வாக ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு உரிய துறைவசம் ஒப்படைக்கப்படும்.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	62	162	மேற்சொன்ன மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்கள் 3 மாத காலத்திற்குள் இடிக்கப்பட்டு, அது குறித்து குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			இவ்வளாகத்தில் உள்ள பழைய கட்டடங்கள் முழுமையாக இடிக்கப்பட்டு, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
17	63	165	தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் 'சித்தா வார்டு' கட்டடம் கட்டும் பணிக்கு 2005–2006 ஆம் ஆண்டிலேயே ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தும், பணி இடத்தில் கட்டுமானப் பணிகளை துவக்க நுழைவு அனுமதி இன்னமும் பெறப்படாதது குறித்து குழு வருந்துகிறது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அளவில் இதுகுறித்து நடவடிக்கை எடுத்து நுழைவு அனுமதி அளிக்கப்பட்டு பணி உடனடியாக துவங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

		துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
		(5)	(6)
		தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் "சித்தா வார்டு" கட்டடம் பணிகள் முடிவுற்று துறை வசம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது என தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	72	189	திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு ரூ. 1.28 கோடி செலவில் கூடுதல் படுக்கை வசதிகள் கொண்ட கட்டடம் கட்டும் பணியை விரைவுப்படுத்திப் பணிகள் முடிக்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

அரசின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதிகள் கொண்ட கட்டடம் கட்டும் பணி கட்டடம் பூச்சு வேலைகள் நடைபெற்று வருகிறது மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2009 க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	76	197	பொதுப்பணித்துறை மூலம் கட்டப்படும் கட்டடங்களுக்கு நிர்ணயிக்கப்படும் செந்தர விலைப்பட்டி (Schedule of Rates) அனைத்து மாவட்டத்திற்கும் ஒரே மாதிரியாக நிர்ணயிக்கப்படாமல் அந்தந்த மாவட்டம் அமைந்துள்ள நிலப்பகுதி, கட்டுமானப் பொருட்கள் கிடைத்தல், அவ்வப்போது கட்டுமானப் பொருட்களின் விலையேற்றம், வேலைக்கு ஆட்கள் கிடைத்தல் போன்ற பல்வேறு கூறுகளைக் கருத்திற் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் அதன் அடிப்படையில் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பொதுப்பணித்துறையால் தயாரித்து அங்கீகரிக்கப்படும் செந்தரவிலைப் பட்டியல் (Schedule of Rates) தமிழகத்தின் அனைத்து துறைகளிலும் திட்டப் பணிகளுக்கான அனைத்து மதிப்பீடுகள் தயாரிப்பதிலும், ஒப்பந்தப்புள்ளிகள் தொிவு செய்வதிலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இச்செந்தரவிலைப் பட்டியல் முன்னர் மாவட்டந்தோறும் தனித்தனியே சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளர்களால் அந்தந்த மாவட்ட மட்டத்தில் கருத்தறியும் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் அனைத்து துறை அதிகாரிகளின் கருத்தறிந்து செந்தர விலைப் பட்டியல்கள் இறுதி செய்யப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1ம் நாள் முதல் உபயோகிக்கும் வகையில் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டு வந்தது.	குழுவின் பரிந்துரை நிறைவேற்றப்பட்டதாக கருதலாம்.
2. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட செந்தர விலைப்பட்டியல் (S.O.R.) களில் பல இனங்களில் மாவட்டத்திற்கு மாவட்டம் பெரும் வேறுபாடுகள் இருந்ததைக் காண முடிந்தது. இதனால் பல்வேறு துறைகளிடமிருந்தும் இது குறித்த புகார்கள் பெறப்பட்டன.	
3. அரசு திட்டப் பணிகளை செயலாக்கும் போது அதற்கான ஒப்பந்தப்புள்ளிகளில் முடிவெடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்ப்பது குறித்து ஆராய்வதற்கென தமிழக அரசால் நியமிக்கப்பட்ட நீதியரசர் இராமானுஜம் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு இது குறித்து ஆராய்ந்து வழங்கிய பரிந்துரைகளின்படி, அரசாணை (நிலை) எண். 555 பொ.ப.(ஜீ.2) துறை நாள் 17–11–1999ல் தமிழக அரசு நடைமுறைகளுக்கேற்ற விலைப்பட்டியல் தயாரிப்பதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு இதுவரை கண்காணிப்புப் பொறியாளர்களால் தயாரித்து வழங்கப்பட்ட செந்தர விலைப்பட்டியல்களில் இருந்து வந்த குறைபாடுகளைக் கண்டறிந்து, அவற்றைக் களைந்து, தமிழகம் முழுமையிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் ஒருங்கினைந்து நான்கு மண்டலங்களாகப் பிரித்து, அதனடிப்படையில் இறுதி செய்யப்பட்டு முதன் முதலாக ஒரு ஒருங்கினைந்த செந்தர விலைப்பட்டியல் (S.O.R.) அக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு 22–08–2002 முதல் அமலாக்கத்திற்கு கொண்டுவரப்பட்டது. இக்குழுவில் தற்போது கீழ்கண்ட அதிகாரிகள் உறுப்பினர்களாவார்கள்.	
1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொதுப்பணித் துறை, சென்னை–5–*உறுப்பினர்*	
2. தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் கட்டுமானப் பணி பொதுப்பணித் துறை, சென்னை–5–*உறுப்பினர்.*	
3. தலைமைப் பொறியாளர், கட்டடங்கள் பொதுப்பணித் துறை, சென்னை–5–*உறுப்பினர்.*	

4. தலைமைப் பொறியாளர், (பொது) நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5–*உறுப்பினர்.*

5. நிதித்துறையைச் சார்ந்த பிரதிநிதி –*உறுப்பினர்.*

6. இந்திய கட்டடம் கட்டுவோர் சங்கத்தின் பிரதிநிதி தொடக்கக் கூட்டங்களுக்கு சிறப்பு அழைப்பாளர்.

இச்செந்தர விலைப்பட்டியல் அங்கீகரிக்கப்பட்டபோது, மாநிலம் முழுமைக்குமான கூலியாட்களின் கூலி, தமிழக அரசின் தொழிலாளர் நல வாரியம் கூலியாட்களின் கூலி நிர்ணயம் செய்யும்போது கடைபிடிக்கும் பொதுவான கூலியைப்போன்றே ஒரே மாதிரி அங்கீகரிக்கப்பட்டு, சிறப்பு இனங்களில் அதாவது, மாநகராட்சி எல்லைக்குள், மலைப் பிரதேசங்களில், அடர்ந்த காட்டுப் பகுதிகளில், சிறைச்சாலைகளுக்குள் என்பது போன்ற இனங்களுக்கு கூடுதல் விழுக்காடுகள் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

இதனால், கூலியாட்கள் கூலி, மூல கட்டுமானப் பொருட்களின் விலை ஆகியன மண்டலந்தோறும் நிர்ணயம் செய்து, செந்தர விலைப்பட்டியல் நிர்ணயம் செய்யும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு வழங்குகையில், பணி நடைபெறும் இடங்களைப் பொறுத்து அவற்றின் மீது, வாகனக் கட்டணங்கள் உள்பட கூடுதல் விழுக்காடுகள் வழங்கப்பட்டு வருகின்றது. மூல பொருட்களின் விலை அவை கிடைக்குமிடத்திலிருந்து பணி நடைபெறும் இடத்திற்கான தூரத்தைப் பொருத்து வாகனக் கட்டடணங்கள் அனுமதிக்கபடுவதால், பணி நடைபெறுமிடத்தில் அப்பொருளுக்கான சரியான விலை கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, அரசு திட்டங்களுக்கு மாதிரி மதிப்பீடுகள் தயாரிப்பதில் உபயோகிக்கப்படும் தளபரப்பு விலை விகிதப்பட்டியல் (Plinth Area Rates for Rough Cost Estimates) மாநிலம் முழுமைக்கும் பொதுவாகவே இத்துறையில் அங்கீகரிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளது. எனவே, செந்தர விலைப்பட்டியல் (S.O.R.) தற்போதுள்ள வழக்கப்படி கடைபிடிப்பதனால் திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கும் நிலை வராது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் பணிகள் மேற்கொள்ளுகையில், செந்தர விலைப்பட்டியல் உள்ள பணியாட்களின் கூலிக்குமேல் வழங்கப்படும் கூடுதல் விழுக்காடுகள் குறித்த விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

திருப்பூர் மாநகராட்சி	–10%
கோயம்புத்தூர்	–10%
ஊட்டி மாவட்டம்	–40%
ஈரோடு மாநகராட்சி	–10%

துறையின் பதில்

(5)

இவற்றிலிருந்து, திருப்பூர், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய மாநகராட்சிகளில் பணிகளில் ஈடுபடும் பணியாட்களுக்கு, சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகளில் வழங்கப்படும் அதே 10 விழுக்காடுகள் பணியாட்களுக்கு கூடுதலாக வழங்கப்படுகிறது என்பதை அறியலாம். அதேபோல் மலைப் பிரதேசங்களில் உள்ள சீதோஷ்ண நிலை, பணியாற்றுவதற்குரிய குறுகிய காலம், பணியாட்களின் பணித்திறன் ஆகியனவற்றின் அடிப்படையில் அவர்களுக்கான தினக் கூலியில் கூடுதல் விழுக்காடுகள் செந்தர விலைப்பட்டியல் குழுவினால் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, இக் குழுவினால் ஒவ்வொரு ஆண்டும் செந்தர விலைப்பட்டியல் இறுதி செய்யும் போதும் அப்போதுள்ள நிலவரங்களின் அடிப்படையிலும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையிலும், ஆய்வு செய்து, இக்குழுவில் உள்ள உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-2

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றவை

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு–II.

பரிந்துரைகளுக்கான துறையின் பதில்கள் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றவை

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
1	4	14	முந்தைய பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள நேர்வுகளை ஒரு படிப்பினையாகக் கொண்டு வருங்காலங்களில் இது போன்ற பெரிய அளவிலான பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு கோரும் கருத்துருவினை அரசுக்கு அனுப்பும்போதே மேற்சொன்னவை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி அவற்றை சரிசெய்து நிதி மற்றும் கால விரயத்தை துறை தவிர்க்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இனி வருங்காலங்களில் குழு பரிந்துரைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப்பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	5	17	பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுதிகள் கட்டும்போது, அதற்கான இடமே கிடைக்கவில்லை என்ற நிலையில் அதனை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் உறுதி செய்து கொண்ட பிறகு, போதுமான இடம் பள்ளி/கல்லூரி வளாகத்தில் இருந்தால், அவ்வளாகத்திற்குள்ளேயே விடுதியைக் கட்டலாம் என குழு பரிந்துரை செய்கிறது. இது, விடுதி கட்ட இடம் இல்லை என்ற பிரச்சினைக்கு ஒரு தீர்வாக இருக்கும் என்றும் குழு கருதிதுகிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கலந்து பேசி விடுதியின் கட்டிடம் பள்ளி/கல்லூரி வளாகத்திலேயே கட்டுவதற்கு இடமிருக்கும் பட்சத்தில் அவ்வளாகத்திலேயே கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட துறையின் ஒப்புதலோடு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப் பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
3	6	18	மேலும் இனி வரும் காலங்களில் அனைத்துத் துறை கட்டடப் பணிகளுக்கும் சம்பந்தப்பட்ட துறை இடம் தெரிவு செய்யப்பட்டு விட்டதை உறுதி செய்த பின்னரே அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	இனி வருங்காலங்களில் குழு பரிந்துரைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப் பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	7	21	மேற்படி அரசாணை வெளியிடப்பட்ட பின் அதன் நகல் ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குழு பரிந்துரையின்படி அரசாணை நகல் ஒன்றினை குழுவிற்கு அனுப்பிவைக்கப்படும்.	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப் பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	8	22	நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் ஒப்பந்ததாரர் பணியை முடிக்கவில்லை என்றால் அவருக்கு அடுத்த பணியை வழங்கக்கூடாது என்றும் ஒப்பந்ததாரருடைய தகுதியின் அடிப்படையிலேயே பணி அளிக்கப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை.
	(5)	(6)
	துறையில் மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் ஒப்பந்ததாருடைய தகுதியின் அடிப்படையிலேயே அளிக்கப்பட்டு வருகின்றது.	துறையின் பதில் ஏற்றுக்கொள்ளப் பெறலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	21	56	இனிவரும் காலத்தில், பள்ளிகளாக இருப்பினும் மாணவ/மாணவியர் விடுதிகளாக இருப்பினும், கட்டடம் கட்டப்படும்போதே சுற்றுச்சுவரும் கட்டப்படுவதற்கான செலவினையும் மதிப்பீட்டில் சேர்த்து ஒப்புதல் பெறவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	இனிவரும் காலங்களில் கட்டடம் கட்டப்படும்போதே சுற்றுச்சுவரும் கட்டப்படுவதற்கான செலவினையும் மதிப்பீட்டில் சேர்த்து ஒப்புதல் பெறப்படும்.	துறையின் பதில் ஏற்றுக்கொண்டதாக கருதலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	35	92	அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிக் கட்டடம் கட்டும் பணியில் கான்கீரிட் சரியான பருமன் அளவில் போடப்படவில்லை என்றும் கான்கீரிட் போட இரும்பு தகடுகளுக்குப் பதிலாக மரப்பலகைகளை வைத்து செய்யப்படுவதாகவும் கட்டடத்தில் விரிசல்கள் உள்ளதாகவும் நேரில் கண்டறிந்ததால், பணியை உயர்மட்ட அளவில் துறை ஆய்வு செய்ய வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
குழு பரிந்துரைத்தபடி மேற்கண்ட பணியை கண்காணிப்புப் பொறியாளர், கட்டட (கட்டு மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம் தலைமையில், செயற்பொறியாளர், பொ.ப.து., கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) கோட்டம், தருமபுரி, உதவி செயற்பொறியாளர், பொ.ப.து. கட்ட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உப கோட்டம், விழுப்புரம் ஆகியோர் உறுப்பினராகக் கொண்ட குழு 16-6-2008 அன்று ஆய்வு செய்து பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. 1. கட்டடத்தில் நேரிட்டிருந்த விரிசல்கள் Structural cracks வகையில் இல்லை. Plastering cracks வகையில் சிறிய விரிசல்களாகும். 2. Beam மற்றும் Column இணையும், இடத்தில் முழுமையான உறுதித் தன்மையை அடையும் முன் (before attaining complete settlement) செங்கல் கட்டுமானப் பணி செயல்படுத்தப்பட்டதால் சிறிய விரிசல் நேரிட்டுள்ளது. 3. மேற்படி விரிசல்கள் முழுமையாக சரிசெய்யப்பட்டுள்ளது. 4. மேற்படி விரிசல்கள், கட்டடத்தின் உறுதித் தன்மைக்கு எவ்வித ஊறும் ஏற்படுத்தாது. குழுவின் அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.	துறையின் பதில் ஏற்றுக்கொண்டதாக கருதலாம்.



இணைப்பு-3

துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெறவேண்டிய பரிந்துரைகள்

இணைப்பு–III.

துறையிடமிருந்து பதில் வரப்பெற்று நடவடிக்கைகள் மேலும் தொடரப் பெறவேண்டிய பரிந்துரைகள்

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	2	9	மேலும், வாழப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட நெடுஞ்சாலைத் துறையின் அனுமதியை விரைந்து பெறவும், காரியாப்பட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட வருவாய்த் துறையிலிருந்து பணி இடத்தினை விரைந்து பெறவும் மேற்படி இரண்டு அலுவலகக் கட்டடப் பணிகளை ஆரம்பிக்கவும் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது.	வாழப்பாடியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட நில எடுப்புக்கான நெடுஞ்சாலைத் துறையின் அனுமதிபெற சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காரியாப்பட்டியில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட ஒப்பந்தப்புள்ளி இரண்டாம் அழைப்பில் மட்டுமே பெறப்பட்டது. விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு தற்போது பரிசீலனையில் உள்ளது.	துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
2	9	25	மாவட்ட தலைமையிடங்களில் உள்ள விருந்தினர் மாளிகையில் தற்போதுள்ள இடவசதி பற்றிய ஒரு ஆய்வினை துறை மேற்கொண்டு, கூடுதல் அறைகள் / கூடுதல் தளம் அல்லது கூடுதல் கட்டடம் தேவைப்படுகிற இடங்களில் அவற்றை கட்டித்தர உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவாரூரில் 10 அறைகள் கொண்ட கூடுதல் ஆய்வு கட்ட தோராய மதிப்பீடு ரூ.164.00 இலட்சங்கள், நாகப்பட்டினம் மாவட்டத்தில் கூடுதல் கற்றுலா மாளிகை கட்ட தோராய மதிப்பீடு ரூ. 197.00 இலட்சங்கள் (2008–2009)–ன்படி தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு மதிப்பீடுகளும் தற்போதைய 2009–2010–ம் ஆண்டு வினா விகிதப்படி தயாரித்து அனுப்பும்படி வட்ட அலுவலகத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீடு திரும்ப பெறப்பட்டவுடன் அரசுக்கு நிர்வாக ஒப்புதல் பெறவேண்டி அனுப்பி வைக்கப்படும். தருமபுரியில் உள்ள விருந்தினர் மாளிகையில் கூடுதல் கட்டடம் கட்ட தேவையான விரிவான மதிப்பீடு ரூ. 69.00 இலட்சம் அரசுக்கு இவ்வலுவலக கடித எண் உ.செ.பொ.டி.12/42261/ 2008, நாள் 16–4–2009–ல் அனுப்பப்பட்டுள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் வேலுநாச்சியார் விருந்தினர் மாளிகையில் மொத்தம் 8 அறைகளில் 5 அறைகள் குளிர்சாதன வசதிகளுடனும் 3 அறைகள் சாதாரண அறைகளாக உள்ளது. தற்போதுள்ள இடவசதி போதுமானதாகும். எனவே, கூடுதல் அறைகள் /தளம் கட்டத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டம் பெருந்திட்ட வளாகத்தில் 1.50 இலட்சம் மதிப்பீட்டில் கற்றுலா மாளிகை கட்ட அரசு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் கூடுதலாக 5 அறைகளுடன் கூடிய கற்றுலா மாளிகை கட்ட தோராய மதிப்பீடு ரூ. 120.00 இலட்சம் அரசுக்கு நிர்வாக ஒப்புதல் கோரி அனுப்பப்பட்டுள்ளது. **2007–2008 பகுதி திட்டம்** தஞ்சாவூரில் கூடுதல் கற்றுலா மாளிகை கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.	மேற்படி பணிகளை முடிக்க துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

2008–2009 பகுதி திட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் ஐந்து அறைகளுடன் கூடிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை மாவட்டத்தில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.

தருமபுரியில் ஏற்கெனவே உள்ள சுற்றுலா மாளிகையின் தரை செராமிக் டைல்ஸ் போடப்பட்டு பழைய மரத்தள ஊடங்கள் மாற்றப்பட்டு புதிய மரத்தளவாடங்கள் வாங்கி புதிய பொலிவுடன் பயன்பாட்டிலுள்ளது.

தருமபுரியில் ஏற்கெனவே உள்ள சுற்றுலா மாளிகையின் தரை செராமிக் டைல்ஸ் போடப்பட்டு பழைய மரத்தள ஊடங்கள் மாற்றப்பட்டு புதிய மரத்தளவாடங்கள் வாங்கி புதிய பொலிவுடன் பயன்பாட்டிலுள்ளது.

கடலூரில் நான்கு அறைகளுடன் கூடிய சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.

2006–07 பகுதி

கோவையில் மிக மிக முக்கிய விருந்தினர்களுக்கு 2 அறைகளுடன் கூடிய சுற்றுலா மாளிகை கட்டும் பணி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.

2006–07 பகுதி II திட்டம்

சேலத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டி முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிலுள்ளது.

நீர்வள ஆதார அமைப்பின் மூலம் மாமல்லபுரத்தில் 4 அறைகளுடன் கூடிய சுற்றுலா மாளிகை கட்டப்பட்டு வருகிறது.

2009–10 பகுதி 2 திட்டம்

ஏலகிரியில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்ட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வேலூரில் 4 அறைகளுடன் கூடிய கூடுதல் சுற்றுலா மாளிகை கட்ட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் கடலாடியில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்ட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

துறையின் பதில்–தொடர்ச்சி	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
திருநெல்வேலியில் மிக மிக முக்கிய பிரமுகர்களுக்கு 4 அறைகளுடன் கூடிய சுற்றுலா மாளிகை கட்ட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் 2 அறைகளுடன் கூடிய ஆய்வு மாளிகை கட்ட அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி 2009–10 பகுதி 2 திட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு அரசாணை பெற்றவுடன் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. *[கடித எண் உ.செயொடி 12/42261/2008, 16–6–2009.]*	மேற்படி பணிகளை முடிக்க துறை துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	*பாரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
3	11	30	திருச்சி கரூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்ட தலைமையிடங்களில் உள்ள விருந்தினர் மாளிகைகளுக்கு முன்னுரிமை அளித்து கூடுதல் தளங்களோ அல்லது கட்டடங்களோ கட்டித்தருவதற்கு உரிய நடவடிக்கையினை துறை மேற்கொள்ள வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மாவட்ட தலைநகரமாகிய திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் கூடுதல் ஆய்வு மாளிகை மற்றும் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான மதிப்பீடு முறையே ரூ. 164.00 இலட்சம் மற்றும் 197.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. இதனை தற்போதைய 2009–10 ஆண்டு விலை விகிதப்படி தயாரித்து திருப்பி அனுப்ப செயற்பொறியாளருக்கு திருப்பி அனுப்புமாறு தோராய மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன் அரசுக்கு நிர்வாக ஒப்புதல் கோரி அனுப்பிவைக்கப்படும்.	துறை பணிகளை முடிக்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
தருமபுரி மாவட்டம் தருமபுரி தலைமையிடத்திலுள்ள விருந்தினர் மாளிகைக்கு கூடுதல் கட்டடம் கட்ட தேவையான விரிவான மதிப்பீடு ரூ. 69.00 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் கோரி இக்கடித எண் உ.செ.பொ.டி 12/42261/2008, நாள்: 16–6–2009–ல் அனுப்பப்பட்டுள்ளது.	
திருச்சி மாவட்டத்தில் கூடுதலாக 5 அறைகளுடன் கூடிய சுற்றுலா மாளிகை கட்ட தோராய மதிப்பீடு 120 இலட்சம் அரசுக்கு நிர்வாக ஒப்புதல் கோரி அனுப்பப்பட்டுள்ளது.	

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
4	12	33	தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வனத்துறை ஒய்வு இல்லம் கட்டும் பணியை இதுவரை பொதுப்பணித் துறை செய்துள்ளது என்று அறிந்த குழு, தொடர்ந்து எஞ்சியுள்ள பணிகளையும் பொதுப்பணித்துறையே செய்து முடிக்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
		(5)	(6)
		தருமபுரி மாவட்டம், மொரப்பூர் வனத்துறை ஓய்வு இல்லம் கட்டும் பணி நிதி ஒதுக்கீடு இன்மையால் பாதியில் நிறுத்தப்பட்டது. தற்போது வனத்துறைக்கு நிதி ஒதுக்கீடு அரசிடமிருந்து வரப்பெற்று அந்தப் பணி செய்த ஒப்பந்தகாரருக்கு நிலுவைத் தொகை வழங்கப்பட்டு விட்டது மேலும், பாதியில் நிறுத்தப்பட்டிருந்த அந்த கட்டடத்தை அந்த துறை வசமே 4–3–2009–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வனத்துறையே மீதமுள்ள பணிகளை செய்து முடிக்க ஒப்புக் கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.	பணியின் தற்போதைய நிலையை தெரிவிக்க துறையினை கோரலாம்.

வரிசை எண்.	பாரிந்துரை எண்.	பத்தி எண்.	பாரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
5	14	38	காஞ்சிபுரம்–வந்தவாசி சாலையில் வேறு பயணியர் விடுதி இல்லாத நிலையில் வீரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள பழைய விடுதி கட்டடத்தை இடித்து விட்டு புதியதாக பயணியர் விடுதி கட்டடம் கட்டித் தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	வீரம்பாக்கம் ஊராட்சியில் உள்ள பழைய வீதி கட்டடம் கட்ட அமைப்பைச் சாராதது அல்ல. இக்கட்டடம் நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்தது ஆகும். எனவே இப்பணிக்கான கருத்து நீர்வள ஆதார அமைப்பு மூலம் கருத்துரு பெறப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.	பொதுப் பணித் துறை (கட்டடம்) இப்பணியை நீர்வள ஆதார அமைப்பு மூலம் விரைந்து முடிப்பதற்கு தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
6	15	41	வேலூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலை விரைந்து பெற்று சுற்றுலா மாளிகை கட்டப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
வேலூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டும் பணிக்கு 2009–10ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தில் ரூ. 55.00 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதற்கான விரிவான மதிப்பீடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசிடமிருந்த நிர்வாக ஒப்புதலுக்கான அரசாணை எதிர்பார்க்கப்படுகிறது. அரசாணை பெற்றவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.	மதிப்பீடு ஒப்புதல் பெற்று துரித நடவடிக்கையினை துறை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
7	16	42	வேலூர் மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டடம் வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கூடுதல் கட்டடம் கட்ட 2008–09 ஆம் ஆண்டு விலைவிகிதப்படி ரூ. 835.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரின் மேலொப்பம் பெற செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமானக் கோட்டம் வேலூர் அவர்களால் (கடித எண். துனூ/கு.701/103 ஆ/2008, நாள்: 26–11–2008) அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் ஒப்புகைக்குப்பின் விரைவில் அரசுக்கு அனுப்பி நிர்வாக ஒப்புதல் பெற்று பணி மேற்கொள்ளப்படும்.	இப்பணியை முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	*(2)*	*(3)*	*(4)*
8	17	45	திருவாரூரில் கூடுதல் அரசு விருந்தினர் மாளிகை கட்டப்படுவதற்கான வரைபடத்தினை விரைந்து பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் விருந்தினர் மாளிகை கட்டித்தர வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
திருவாரூரில் 10 தங்கும் அறைகள் கொண்ட கூடுதல் ஆய்வு மாளிகை கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ. 164.00 இலட்சத்திற்கு (2008–09) தயாரிக்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பெறப்பட்டுள்ளது. தற்போதைய (2009–10) ஆண்டு விலை விகிதப்படி தயாரித்து அனுப்ப செயற்பொறியாளருக்கு மதிப்பீடு திருப்பி அனுப்பப்படுகிறது. மதிப்பீடு 2007–10ஆம் ஆண்டின் விலை விகிதப்படி தயாரிக்கப்பட்டவுடன் அரசுக்கு விரைவில் நிர்வாக ஒப்புதல் கோரி அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.	நிர்வாக ஒப்புதல் பெற்று பணியை விரைவில் முடிப்பதற்கு தூரித நடவடிக்கையை துறை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
9	18	48	பொதுப்பணித்துறையின் மாவட்ட அளவிலான செயற்பொறியாளர்களுக்கு குடியிருப்புகள் இல்லாத நாமக்கல் போன்ற மாவட்டங்களில் குடியிருப்புகள் கட்டித் தரப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பொதுப்பணித்துறையில் செயற் பொறியாளருக்கு விருதுநகர், ஈரோடு, நாமக்கல், திருச்சி, கோவை, தூத்துக்குடி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்ட ஒரு குடியிருப்பு ரூ. 18.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 144.00 இலட்சத்திற்கு பகுதி II திட்டம் (2009–2010)ல் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அரசு இதனை பரிசீலனையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. எனவே மேற்படி கருத்துருவை 2010–2011ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.	துறை இப்பணியை நிறைவேற்றிட தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
10	19	52	உதகமண்டலம் ஸ்டோன் ஹவுஸ் ஹில் பகுதியில் உள்ள 60 முதல் 90 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட 253 அரசு அலுவலர் குடியிருப்புகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் அவற்றை இடித்து விட்டு புதியதாக குடியிருப்புகள் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
ஸ்டோன் ஹவுஸ் உதக மண்டலம் பகுதியிலுள்ள 253 அரசு அலுவலர் குடியிருப்புகள் அனைத்தும் தற்சமயம் முழுமையாக உபயோகித்து வருவதால் குடியிருப்புகள் அனைத்தையும் முழுவதுமாக இடித்து ஒரே சமயத்தில் புதியதாக குடியிருப்புகள் கட்டுவது நடைமுறைக்கு ஏற்றதாக இருக்காது எனக் கருதப்படுவதால், அதனை வருடா வருடம் ஒரு சில குடியிருப்புகளை இடித்துவிட்டு அரசிடம் நிதி ஆதாரம் பெற்று புதிய குடியிருப்பு கட்டுமான பணி மேற்கொள்வது நடைமுறைக்கு ஏற்புடையதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. அதன் அடிப்படையில் ஸ்டோன் ஹவுஸ் ஹில் உதகமண்டலம் பகுதியில் 24 குடியிருப்புகளை இடித்து கட்ட கிடைக்க பெறும் இடம் 57.00 மீட்டர் ஒ 35.00 மீட்டர் ஆகும். மேற்படி இடத்தில் அடுக்கு மாடி வீடுகளாக கீழ்க்கண்டவாறு குடியிருப்புகள் கட்டலாம். 'பி/டைப் அரசு அலுவலர் – 10 'சி' / டைப் அரசு அலுவலர் – 20 'டி' / டைப் அரசு அலுவலர் – 20 – 50 மேற்கூறியவாறு குடியிருப்புகள் கட்டுமான பணி மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு உரிய வரைபடம் Type (design) தலைமைக் கட்டட கலைஞர் அலுவலகத்தில் கோரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் கருத்துரு செயற்பொறியாளரிடம் பெறப்பட்டவுடன் அரசுக்கு அனுப்பப்படும்.	இதன் மீது துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
11	22	57	'நபார்டு' நிதியுதவியில் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள கருத்துருவின் மீது எடுக்கப்பட்ட முடிவு குறித்து குழுவிற்கு தெரிவிக்கவேண்டும் என்றும் குழு விரும்புகிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அரசாணைகளில் நகல் தற்போது இணைக்கப்பட்டுள்ளது. பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. பாராளுமன்றத் தேர்தலுக்குப்பிறகு ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	துறை இப்பணியினை நிறைவேற்றிட தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
12	23	61	பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மாணவ/மாணவியர் விடுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிக்கும் அமைப்பினை நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீட்டினை விரைந்து பெறுவதற்கு துறை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குழு பரிந்துரைசெய்கிறது.

			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் மாணவ/மாணவியர் விடுதிகளில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிக்கும் அமைப்பினை நிறுவுவதற்கான நிதி ஒதுக்கீட்டினை அரசிடமிருந்து பெறுவதற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.	இப்பணியினை தூரிதமாக முடிக்க துறை நடவடிக்கை எடுக்கலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
13	24	63	கரூர் மாவட்டம், புகளூர் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டித்தரப்படுவதற்கான நடவடிக்கைகளை பள்ளிக்கல்வித்துறை மேற்கொண்டு உரிய கருத்துருவினை பொதுப்பணித்துறைக்கு அனுப்ப வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	கரூர் மாவட்டம், புகளூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சுற்றுச்சுவர் 500 மீட்டர் நீளத்திற்கு கட்டுவதற்கு கருத்துரு பள்ளிக் கல்வித் துறை மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. புகளூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டுவது சம்மந்தமாக கருத்துரு பள்ளிக் கல்வித்துறையிடமிருந்து ஏதும் பெறப்படவில்லை.	இரு பணிகளையும் விரைவாக முடித்திட பொதுப் பணித் துறை, பள்ளிக் கல்வித் துறையை தூரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
14	26	68	திருச்சி அரசு சட்டக் கல்லூரி மாணவர்களுக்கான விடுதி கட்ட இடம் கிடைக்காத நிலையில், அந்தக் கல்லூரி வளாகத்திலேயே உள்ள இடத்தை பயன்படுத்தி விடுதியினை உடனடியாக கட்ட, சட்டக் கல்வி இயக்குநர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தற்போது மாணவர் விடுதிக்கட்டடம் கட்ட ஒதுக்கப்பட்ட இடத்திற்கான கையகப்படுத்துவதற்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்ட தடையாணை நீக்கப்பட்டவுடன் மாணவர் விடுதிக்கட்டும் பணியினைத் தொடரலாம் என சட்டக்கல்வி இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.	தடையாணையை நீக்க துறை விரைவாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
15	27	71	புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி, மீமிசல், கீரமங்கலம் மற்றும் ராயவரம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிகள் கட்டப்பட இடம் தெரிவு செய்யப்பட்டு கட்டடம் கட்டப்படுவதற்குப் பொதுப்பணித்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது குறித்து, கட்டடப் பணிகள் துவங்கப்பட்டது குறித்து, குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி, மிமிசல், கீரமங்கலம் மற்றும் ராயவரம் ஆகிய இடங்களில் விடுதிகள் கட்டுவதற்கான வில்லங்கமில்லா தளங்கள் (undisputed site) 18–6–2008 வரை பயன்பாட்டுத் துறையினரால் ஒப்படைக்கப்படவில்லை.	இப்பணியை முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
16	28	74	காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்பதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு சுற்றுச்சுவர் மற்றும் 10 கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை பள்ளிக் கல்வித் துறை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்பதூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் மூலம் கட்டம் IIIல் 28 வகுப்பறைகள் கட்டுவது சம்மந்தமாக கருத்துரு பள்ளிக்கல்வித்துறையிடமிருந்து பெறப்பட்டவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும், மேற்கண்ட பள்ளிக்கு சுற்றுச்சுவர் 849 மீட்டர் நீளத்திற்கு கட்டுவது சம்பந்தமான கருத்துரு பள்ளிக்கல்வித் துறையிடமிருந்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.	இப்பணிகளை தூரிதமாக மேற்கொள்ள துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
17	29	78	வால்பாறை அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டுவதற்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசின் ஒப்புதலை விரைவாக பெற்று வகுப்பறைகள் கட்டித்தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
அரசாணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. பாராளுமன்ற தேர்தல் முடிந்தவுடன் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	இப்பணியினை விரைவில் முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
18	31	80	வால்பாறை பகுதியில் யானைகள் மற்றும் வன விலங்குகளின் தொல்லை உள்ளதை கருத்திற்கொண்டு அப்பகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச்சுவர் கட்டித்தருவதற்கான சாத்தியக் கூறினை பள்ளிக் கல்வித் துறை ஆராய வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
இப்பொருள் குறித்த நடவடிக்கைகள் பள்ளிக்கல்வித்துறை மூலம் மேற்கொள்ளப்படும்.	பள்ளிக் கல்வித் துறையினால் மேற்கொள்ளப்படும் பணியின் தற்போதைய நிலை தெரிவிக்க துறையை கோரலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
19	33	86	கோயம்புத்தூர் மாவட்டம், கொமாரலிங்கத்தில் இயங்கிவரும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்துதரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பயன்பாட்டுத் துறையினரிடமிருந்து எந்த கருத்துருவும் 18-6-2008 வரை கிடைக்கப்பெறவில்லை.	பண்பாட்டுத் துறையை தூரிதப்படுத்தி கருத்துரு பெற்று இப்பணியை விரைவாக முடிக்க துறை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
20	34	89	2005–2006ஆம் ஆண்டிலேயே அனுமதி அளிக்கப்பட்டும் இடம் தெரிவு செய்வதில் உள்ள பிரச்சினை காரணமாக கட்டடம் கட்டப்படாமல் உள்ளது குறித்து குழு வருந்துகிறது. நீதிமன்ற தடை ஆணையை நீக்கி அல்லது மாற்று இடம் தெரிவு செய்து கட்டடம் கட்டப்பட துறை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர் விடுதி கட்டுவதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கு கருத்துரு ஒப்புதல் வழங்க அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.	கருத்துருவிற்கு ஒப்புதல் பெற்று இப்பணியை உடனடியாக துவக்கி முடிப்பதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
21	36	93	வரும் கல்வியாண்டிற்குள் பணிகள் முடிக்கப்பட்டு புதிய கட்டடத்தில் வகுப்புகள் நடைபெறுவதை துறை உறுதி செய்ய வேண்டும் என்றும் இது குறித்து அறிக்கை ஒன்றினை குழுவிற்கு அளிக்கவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 28 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. மேலும் இப்பணி 30–6–2008–க்குள் முடிவுறும் என தெரிவிக்கப்படுகிறது.	துறையின் பணியின் தற்போதைய நிலவரம் தெரிவிக்கவும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
22	37	96	திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் புதியதாக வகுப்பறையுடன் கூடிய இயற்பியல் ஆய்வுக்கூடமும் மற்றும் பள்ளியை பாதுகாக்க சுற்றுச்சுவரும் கட்டித்தரப்பட வேண்டும் என்றும், இது சம்பந்தப்பட்ட நடவடிக்கையினைப் பள்ளிக் கல்வித் துறை விரைந்து எடுக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவண்ணாமலை மாவட்டம், அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டம் மூலம் கட்டம் 7–ல் 23 வகுப்பறை மற்றும் ஆய்வக வசதி கொண்ட கட்டடம் கட்டி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் 280 மீட்டர் நீளத்திற்கு கட்டுவது சம்மந்தமான கருத்துரு பள்ளிக்கல்வித் துறை மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.	சுற்றுச் சுவர் கட்டுவதற்கு துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
23	38	97	மேற்படி ஆரணி அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தில் கூடைப்பந்து ஆடுகளம் விரைந்து அமைத்துத்தரப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் கூடைப்பந்து ஆடுகளம் உள்ளிட்ட சிறு உள் அரங்கம் (Mini Stadium) அமைத்திடும் கருத்துரு திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு அலுவலர் அலுவலகம் மூலம் அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உரிய செயற்பொறியாளருக்கு தொடர் நடவடிக்கை எடுத்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.	கருத்துரு ஒப்புதல் பெற்று பணியை துரிதப்படுத்த துறை நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
24	39	100	நீதிமன்ற நிறுத்திவைப்பு ஆணையின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள செய்யாறு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக் கட்டடத்தைக் கட்டுவதற்கு மாற்று இடம் தெரிவு செய்வது குறித்து அரசுக் செயலாளர்கள் அளவில் கலந்து பேசி உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் விடுதிக் கட்டடம் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
விடுதி கட்டுவதற்கான தளம் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.	துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
25	40	103	வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கீ.வி. குப்பம் என்ற இடத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக் கட்டுவதற்கு மாற்று இடம் தெரிவு செய்தும் அந்த இடங்களை பொதுப் பணித்துறையிடம் விரைவாக ஒப்படைக்க, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கீ.வி. குப்பம் பதிலாக ஆற்காடு என்ற இடத்தில் விடுதி கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி (Tender) கோரப்பட்டுள்ளது. சோளிங்கருக்கு பதிலாக ரண்டாடி என்ற இடம் தெரிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. இடம் ஒப்படைக்கப்படவில்லை.	இதன் தற்போதைய நிலவரம் தெரிவிக்கவும், துறை மேலும் தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
26	41	106	நாகப்பட்டினம் மாவட்டம், காளியில், பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்டுவதற்கு அரசின் திருத்திய நிர்வாக ஒப்புதலை விரைவாகப் பெற்று, ஒரு மாத காலத்திற்குள் மேற்படி விடுதி கட்டடப் பணிகள் துவங்கப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
	(5)	(6)
	காளியில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி கட்டுவதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதலுக்கு கருத்துரு ரூ.47.60 லட்சத்திற்கு ஒப்புதல் வழங்க அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.	நிர்வாக ஒப்புதல் பெற்று துறை தூரித நடவடிக்கை எடுத்து இப்பணியை முடித்திட வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
27	42	109	திருத்துறைப்பூண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட இடம் தெரிவு செய்வதில் உள்ள இடர்பாடுகளைக்களைய மாவட்ட ஆட்சியர் அவர்கள் நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்பட வேண்டுமென்றும், இக்கட்டடம் விரைவாக கட்டித்தரப்பட வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			திருத்துறைப்பூண்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களால் தெரிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்படவில்லை.	இதன் மீது துறை தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.	துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
28	43	112	பெரம்பலூர் மாவட்டம், கும்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டித்தரப்படுவதற்கான நடவடிக்கைகளைப் பள்ளிக் கல்வித்துறை எடுக்க வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.	பெரம்பலூர் மாவட்டம், கும்பலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டுவது சம்பந்தமாக பள்ளிக் கல்வித்துறை மூலம் அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவில் இடம் பெறவில்லை புதிதாக கருத்துரு பெறப்பட்டவுடன் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	கருத்துருவினை அத்துறையிடமிருந்து பெற்று தூரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
29	45	116	தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மொரப்பூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமியண ஹள்ளி அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொ. மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பயர்நத்தம், மெனசி, காளிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் அதிகாரப்பட்டி உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றிற்கு தளவாட சாமான்களுடன் போதுமான வகுப்பறை கட்டடங்கள், சுற்றுச்சுவர், குடிநீர் ஆகிய வசதிகள் செய்து தரப்படவேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பொ. மல்லாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின் மூலம் கட்டம் 9–ல் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. பாராளுமன்ற தேர்தல் முடிந்தவுடன் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காளிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டம் மூலம் கட்டம் 3–ல் 10 வகுப்பறைக்கு கட்டம் & சிடி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றுச்சுவர் 400 மீட்டர் நீளம் கட்டுவதற்கு பள்ளிக் கல்வித்துறை மூலம் கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மொரப்பூர் ஊராட்சி ஒன்றியம் மொரப்பூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, இராமியண ஹள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி பாப்பிரெட்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் பயர் நத்தம், மெனசி அரசு மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அதிகாரப்பட்டி உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றிற்கு கூடுதல் வகுப்பறைகள் மற்றும் இதர வசதிகள் செய்வதற்கான கருத்துரு பள்ளிக் கல்வித் துறையிடம் பெறப்பட்டபின் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.	இப்பணிகளை தூரிதமாக முடித்திட துறை விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
30	48	125	பராமரிப்பு நிதி என்றால் ஒரு பொதுவாக அனைத்து அரசு கட்டடங்களையும் பராமரிக்க என்ற அளவில் இருக்கும். எனவே, பாரம்பரியமிக்க கட்டங்களைப் பராமரிக்க என்று தனிக் கணக்குத் தலைப்பின் கீழ், தனியாக நிதி ஒதுக்கீடு செய்து, அக்கட்டடங்களைப் பராமரிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
பாரம்பரிய கட்டடங்களை பராமரிக்க தனித்தலைப்பின் கீழ் தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய அரசு நிதித்துறை மட்டத்தில் முடிவு செய்தால், அக்கட்டடங்களை சிறப்பாக பராமரிக்க இயலும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
31	49	128	சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் பழமையானதாக உள்ளதால் அதனை இடித்துவிட்டு, அந்த வளாகத்தில் போதுமான நிலம் இருப்பதால், அவ்வளாகத்தில் நடுவர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஆகியவை அமையும் வண்ணம் விரைவில் ஒருங்கிணைந்த புதிய நீதிமன்றக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழியில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்குரிய பணி தற்போதைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பு அறிக்கையிலோ அல்லது உயர்நீதிமன்றத்தின் முன்னுரிமை பட்டியல்களிலோ இப்பணி பெறவில்லை என்ற காரணத்தினால், தலைமைக் கட்டட கலைஞர், பொ.பது. அவர்கள் இப்பணிக்கான (Lr.No.CA/1260.2008/dated 30-1-2009) வரைப்படம் தற்சமயம் எடுத்துக் கொள்ள தேவையில்லை. வருகின்ற வருடம் (2009-2010) முன்னுரிமை பட்டியலில் இப்பணி இடம் பெற்றவுடன் இப்பணிக்கான வரைப்படம் மற்றும் தோராய மதிப்பீடுகள் தயார் செய்து உயர்நீதி மன்றத்திற்கு ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.	இப்பணிகளை துவக்கி முடித்திட குழு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
32	50	131	குடியாத்தம் சார்பு நீதிபதி மற்றும் குற்றவியல் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டப்படுவதற்கான ரூ.44.81 இலட்சம் திருத்திய மதிப்பீட்டின்பேரில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்றும், குடியிருப்புகள் விரைவில் கட்டித்தரப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	*(6)*
குடியாத்தம் சார்பு நீதிபதி மற்றும் மாவட்ட முன்சீப் குடியிருப்புகள் கட்டப்படுவதற்கான புதிய வரைபடத்தின்படி 2008–2009–ம் செந்தரப்பட்டியல் (Schedule of Rates) விலைவிகிதப்படி திருத்திய விரிவான மதிப்பீடு (revised detailed estimate) ரூ.54.60 இலட்சத்திற்கு அரசின் திருத்திய ஆட்சி ஒப்பளிப்பு பெற்றுத்தரக் கேட்டு இவ்வலுவலக கடித எண்.உ.கெ.பொ/17/44909A/2000 நாள் 16–06–2008–ல் செயலர், உள்துறை சென்னை–9–க்கு அனுப்பப்பட்டும் 20–09–2008–ல் ஒரு நினைவூட்டு கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தற்சமயம், பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை–104 அவர்கள் அரசு முதன்மை செயலர், உள்துறை/சென்னை–9 அவர்களுக்கு கடிதம் ஆர்.ஒ.சி.எண் 2623–ஏ/2000/டி.5/நாள் 21–11–2008–ல் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட ரூ.19.00 இலட்சத்திற்கு பதிலாக ரூ.54.50 இலட்சத்திற்கு அரசின் ஒப்புதல் பெற்றுத்தரக் கேட்டு கடிதம் அனுப்பியுள்ளார். (R.O.C.No. 2623-A/2000/D5) (Letter No. AEE/T./7/46909/2000, Dt. 16–6–2008)	துறை நினைவூட்டுகள் அனுப்பி பணியினை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	*பரிந்துரை எண்.*	*பத்தி எண்.*	*பரிந்துரைகளின் சுருக்கம்.*
(1)	*(2)*	*(3)*	*(4)*
33	52	137	கோயம்பத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் வட்டார துணைப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தரப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பெற வேண்டுமெனக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையில் வட்டாரத்துணை போக்குவரத்து அலுவலக கட்டடம் கட்ட உடுமலைப்பேட்டையிலுள்ள அருள்மிகு சித்தான்டீஸ்வரர் கோவிலுக்குரிய இடத்தில் இடம் தெரிவு செய்து நிலமதிப்பீடு அளிக்க கோரி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு நிலுவையிலுள்ளது. மேற்படி கட்டடம் கட்டுவதற்கான நிலமாற்றம் முடிவுற்று கட்டுமான தளம் இத்துறைவசம் ஒப்படைக்கப்பட்டவுடன் அதில் வரைபடம் மற்றும் மதிப்பீடு தயாரித்து அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துரித நடவடிக்கையை துறை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
34	54	143	திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சிறு கருத்தரங்கு கூடம் (Mini Conference Hall) கட்டப்படவும், மின்தூக்கி (Lift) வசதி அமைக்கப்படவும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில், புதிய பல்துறை கட்டடம் கட்டும் பணிக்கு, அரசாணை எண். 610, வருவாய் துறை, நாள்: 22–10–2008–ன்படி நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இக்கட்டட வளாகத்தில் சிறுகருத்தரங்கு கூடம் அமைக்க மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு தற்போது தகுதி காண் விண்ணப்ப ஒப்பந்தப்புள்ளி இவ்வலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்தில் மின்தூக்கி வசதி அமைக்கும் பணிக்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது. (அரசாணை (நிலை) எண் 610, வருவாய் வரி 2(1) துறை, நாள்: 22–10–2008)	இப்பணியை விரைவில் முடித்திட குழு பரிந்துரை செய்கிறது.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
35	55	146	திருநெல்வேலி மற்றும் கிருஷ்ணகிரியில் புதியதாக கட்டப்பட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்கு நவீன தளவாடச் சாமான்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் பிரிவுகள் cubicle அமைப்பில் நிறுவப்படவேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு furniture-க்காக ரூ.36.00 இலட்சம் மதிப்பீடு மாவட்ட ஆட்சியரால் தயாரிக்கப்பட்டு சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் சென்னை-5 வழியாக நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் பெறும்பொருட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு உள் அழகுப் படுத்துவதுடன் நவீன தளவாடச் சாமானகள் ஆகியவற்றிற்காக ரூ.40.00 இலட்சம் அரசாணை எண்.(3டி) எண்.3 வருவாய் வநி 2(1) துறை நாள்: 03-04-2008-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு வருவாய்த் துறையினரால் பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசாணை இணைக்கப்பட்டுள்ளது. (அரசு ஆணை (3டி) எண். 3, வருவாய் (வநி 2(2) துறை, நாள்: 3-4-2008)	இப்பணிகளை விரைவில் முடித்திட துறை தூரித நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
36	57	150	உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகப் பழைய கட்டடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டடம் கட்டப்படுவதற்கான மதிப்பீட்டிற்கு அரசின் ஒப்புதலை விரைந்து பெற்று மேற்படி கட்டடம் கட்டித்தரப்படவேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
உடுமலைப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தை இடித்து விட்டு, புதியதாக கட்டடம் கட்டுவதற்கு 2005-06-ல் ரூ.115.00 இலட்சத்திற்கு தோராய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5 வழியாக அரசுக்கு நிதி ஒப்புதல் பெறும் பொருட்டு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு அரசின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றதும் பணி செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும் மேற்படி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கூடுதல் கட்டடத்தில் முதல் தளம் கட்டவும் பதிவு அறையை நீட்டிப்பு செய்யவும் இவ்வருடம் (2008-2009) பகுதி II திட்டத்தின்கீழ், அரசாணை எண் 306, வருவாய் துறை நாள்: 26-05-2008-ல் ரூ.25.40 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி இந்த ஆண்டு செயலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அரசாணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. [அரசு ஆணை (நிலை) எண் 306, வருவாய் (வ.நி.2(1) துறை, நாள்: 26-05-2008.]	குழுவின் பரிந்துரையை துறை நிறைவேற்றிட தூரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
37	58	153	புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் மற்றும் வலையப்பட்டி அரசு மருத்துவமனைகளை மேம்படுத்தும் பணிகள் 31-03-2008-க்குள் முடிக்கப்படவில்லையென்றால் ஒப்பந்ததாரர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துப் பணிகள் நிர்ணயித்த காலக்கெடுவிற்குள் முடிக்கப்படுவதை துறை உறுதி செய்ய வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
31-03-2008-க்குள் பணிகள் முடிப்பதற்கு கால கெடு நீட்டிக்கப்பட்டிருந்தாலும் கூட பிப்ரவரி மற்றும் மார்ச் 20-08-ல் எதிர்பாரா வண்ணம், பருவம் தவறி பெய்த மழையால் குறிப்பாக தென் மாவட்டங்களில் பெய்த தொடர்மழை புதுக்கோட்டை மாவட்டத்திலும் பெய்தபடியால் பணிகள் முற்றிலும் பாதிப்படைந்தது. மேலும் கட்டுமான பொருட்கள் விலை அம்மாதங்களில் பல மடங்கு அதிகரித்த காரணத்தால் அவற்றை சேகரிப்பதில், தேக்க நிலை ஏற்பட்டது. மேற்கூறிய காரணங்களால் 31-03-2008-க்குள் இப்பணிகளை முழுவதுமாக முடிக்க இயலவில்லை இருப்பினும் ஒப்பந்ததாருக்கு பணியின் தேக்க நிலை குறித்து தெரிவித்து மீதமுள்ள பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அதன்படி சூரைப்பணிகள் முடிவற்று தற்போது பணிகள் முடிக்கப்பெற்றுள்ளது மீதமுள்ள பணிகளை முடிப்பதற்கு ஒப்பந்தக்காரர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.	இப்பணிகளை துரிதமாக முடித்திட துறை நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
38	59	156	புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனைக் கட்டடத்தில் உள்ள பழுதுகளை சரி செய்வதும், கழிவுநீர் செல்ல வசதி செய்து தரப்படவும், குளிர்சாதன வசதியுடன் கூடிய சவக்கிடங்கு அமைத்துத்தரவும் இம்மருத்துவமனை மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திலேயே தங்கக்கூடிய வகையில் குடியிருப்புகள் கட்டித்தரப்படவும் தேவையான கருத்துருக்களை பொதுப்பணித் துறை அனுப்பிவைக்க இயக்குநர், மருத்துவம், ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நலம், சென்னை அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதிலுரை	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருமயம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை கட்டடங்களின் பழுது பார்க்கும் பணிகளுக்காக 2059 M & R மருத்துவமனை என்ற கணக்கு தலைப்பில் 2007–08–ம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.2.25 இலட்சத்தில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை கட்டடங்களில் உள்ள பழுதுகள் சீர் செய்யும் பணிகளுக்கும் ரூ.0.75 இலட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் செல்ல வசதி அளிக்கும் பணிகளுக்கும் செய்து தரப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இது தவிர தற்போதுள்ள மருத்துவர் குடியிருப்புகளை பழுது பார்ப்பதற்காக ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெற்றுதர இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் புதுக்கோட்டை அவர்களுக்கு, புதுக்கோட்டை செயற்பொறியாளரால் அவரது கடித எண் 678, எம்/கோ 13/ப1/நாள்: 26–09–2007 மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றிற்காக மருத்துவ துறையிடமிருந்து ஒப்புதலோ, நிதி ஒதுக்கீடோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நிதி கிடைக்கப் பெற்றவுடன் மருத்துவர் குடியிருப்புகளுக்கு பழுது பார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் குளிர் சாதன வசதியுடன் கூடிய சவகிடங்கு அமைத்து தருவதற்கும், மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திலேயே தங்கக் கூடிய வகையில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு தேவையான கருத்துரு இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் சென்னை–6 அவர்களிடமிருந்து இதுவரை பெறப்படவில்லை. பெறப்பட்ட பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.	குழுவின் பரிந்துரையை முடித்திட துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
39	60	158	புதிய குடியிருப்புகள் கட்டித்தரப்படும் வரையில் தற்போதுள்ள குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், போதிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருமயம் அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை கட்டடங்களின் பழுது பார்க்கும் பணிகளுக்காக 2059 M&R மருத்துவமனை என்ற கணக்கு தலைப்பில் 2007–08–ம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற மொத்த நிதி ஒதுக்கீடான ரூ.2.25 இலட்சத்தில் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் மருத்துவமனை கட்டடங்களில் உள்ள பழுதுகள் சீர் செய்யும் பணிகளுக்கும் ரூ.0.75 இலட்சம் மதிப்பீட்டில் கழிவு நீர் செல்ல வசதி அளிக்கும் பணிகளுக்கும் செய்து தரப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இது தவிர தற்போதுள்ள மருத்துவர் குடியிருப்புகளை பழுது பார்ப்பதற்காக ரூ.9.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு பெற்றதர இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் புதுக்கோட்டை அவர்களுக்கு, புதுக்கோட்டை செயற்பொறியாளரால் அவரது கடித எண் 678, எம்/கோ 13/பி1/நாள்: 26–09–2007–ல் மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவற்றிற்காக மருத்துவ துறையிடமிருந்து ஒப்புதலோ, நிதி ஒதுக்கீடோ இதுவரை கிடைக்கப் பெறவில்லை. நிதி கிடைக்க பெற்றவுடன் மருத்துவர் குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் குளிர் சாதன வசதியுடன் கூடிய சவகிடங்கு அமைத்து தருவதற்கும், மருத்துவர்கள் மருத்துவமனை வளாகத்திலேயே தங்கக் கூடிய வகையில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு தேவையான கருத்துரு இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம் சென்னை–6 அவர்களிடமிருந்து இதுவரைபெறப்படவில்லை. பெறப்பட்ட பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.	குழுவின் பரிந்துரையை செயல்படுத்திட துறை நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
40	64	169	கோயம்புத்தூர் அரசு பொது மருத்துவமனை ஆரம்பித்து 99 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் மிகவும் மோசமான நிலையில் உள்ள பழைய கட்டங்களை இடிக்கவும் அம்மருத்துவமனைக்குத் தேவைப்படும் கட்டடங்கள் குறித்து ஒரு ஆய்வினை மேற்கொண்டு அவற்றை கட்டித் தருவதற்கும் தகுந்த நடவடிக்கைகளை துறை மேற்கொள்ள வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
செவிலியர் கல்லூரி கட்டுவதற்கான போதுமான இடம் தற்போது மருத்துவமனை வளாகத்தில் இல்லை எனவும் மாற்று இடம் தெரிவு செய்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்.	குழுவின் பரிந்துரையை துறை தூரிதமாக முடித்திட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
75 மகளிர் மற்றும் 75 சீ.ஆர்.ஆர்.ஐ மாணவர்கள் தங்கும் விடுதி மற்றும் நிர்வாக அலுவலகக் கட்டடம் ஆகியவற்றுடன் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பின்பு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.	

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரையின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
41	65	170	மேலும், கோயம்புத்தூர் மாவட்டம் கோட்டூர் அரசு மருத்துவமனையில் உள்ள புற நோயாளிப் பகுதிக் கட்டடம் கட்டப்பட்டு 70 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் அதற்கு புதிதாக கட்டடம் கட்டித் தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
கோட்டூர் அரசு மருத்துவமனையில் புற நோயாளிப் பகுதிக் கட்டடம் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ.31 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் பெறும் பொருட்டு, மருத்துவத்துறை இயக்குநருக்கு, அனுப்பப்பட்டுள்ளது. அரசின் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்றபின் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். நிர்வாக ஒப்புதல் பெறப்படவில்லை.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
42	66	173	உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் புனரமைப்புப் பணிகளை விரைவில் மேற்கொண்டு அவை முடிக்கப்பட வேண்டும் என்றும் இதுகுறித்து குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்கண்ட பணிகள் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தக்காரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் மேற்கண்ட பணி உலகவங்கி திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணியாகும் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் பணிகள் முடிக்கப் பெற இயலாது என்ற காரணத்தால் உலகவங்கி இப்பணியை மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துவிட்டபடியால் தற்போது இப்பணிகள் மேற்கொள்ள இயலவில்லை.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
43	67	176	உடுமலைப்பேட்டை அரசு பொது மருத்துவமனையில் கூடுதலாக பிரசவ வார்டு ஒன்றும் 30 படுக்கைகள் கொண்ட கட்டடம் ஒன்றும் கட்டித்தரப்படுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகளைப் பெற்று விரைவில் இறுதி செய்து மேற்படி கட்டடங்கள் கட்டித்தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்கண்ட பணிகள் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தக்காரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் மேற்கண்ட பணி உலகவங்கி திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணியாகும். குறிப்பிட்ட கால கெடுவுக்குள் பணிகள் முடிக்கப் பெற இயலாது என்ற காரணத்தால் உலகவங்கி இப்பணியை மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துவிட்டபடியால் தற்போது இப்பணிகள் மேற்கொள்ள இயலவில்லை.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
44	68	177	மேலும், இம்மருத்துவமனையில் உள்ள ஆண்கள் சிகிச்சைப் பகுதியை விரிவாக்கம் செய்யவும் மற்றும் இரத்த வங்கிக்குப் புதிய கட்டடம் கட்டித்தரவும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்கண்ட பணிகள் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தக்காரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் மேற்கண்ட பணி உலகவங்கி திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணியாகும் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் பணிகள் முடிக்கப் பெற இயலாது என்ற காரணத்தால் உலகவங்கி இப்பணியை மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துவிட்டப்படியால் தற்போது இப்பணிகள் மேற்கொள்ள இயலவில்லை.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
45	69	180	திருப்பூர் நகரம் ஒரு வளர்ந்துவரும் நகரம் என்பதுடன் தற்போது மாநகராட்சியாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளதால், அங்குள்ள அரசு தலைமை மருத்துவமனைக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய மருத்துவமனை கட்டடம் விரைவில் கட்டித்தரப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
மேற்கண்ட பணிகள் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தக்காரர்கள் யாரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் மேற்கண்ட பணி உலகவங்கி திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பணியாகும் குறிப்பிட்ட கால கெடுவுக்குள் பணிகள் முடிக்கப் பெற இயலாது என்ற காரணத்தால் உலகவங்கி இப்பணியை மேற்கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துவிட்டபடியால் தற்போது இப்பணிகள் மேற்கொள்ள இயலவில்லை.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
46	70	183	திருப்பூர் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டடம் மற்றும் தங்கும் விடுதிக் கட்டடம் ஆகியவை உடனடியாகக் கட்டித்தரப்பட வேண்டும் எனக் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருப்பூர் அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டடம் மற்றும் தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் பணிக்கான தோராய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மருத்துவக் கல்வித் துறைக்கு அனுப்பப்படவுள்ளது. நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டபின் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.	துறை குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட தூரித நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
47	71	186	திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர், கோவிலூர், வீரம்பாக்கம் மற்றும் ஆக்கூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஊருக்கு வெளியே பாதுகாப்பு இல்லாமல் அமைந்துள்ளதால் அவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் சுற்றுச்சுவர் விரைவாக கட்டித்தரப்பட வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
திருவண்ணாமலை மாவட்டம், அனாக்காவூர், கோவிலூர், வீரம்பாக்கம் மற்றும் ஆக்கூர் ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கான கருத்துரு சுகாதாரத் துறையிடமிருந்து பெறப்பட்டவுடன், பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
48	73	192	வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வார்டு கட்டும் பணியில் உள்ள நிகர சேமிப்பு தொகையிலிருந்து ரூ.1,41,00,000/– அம்மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர், வாகனங்கள் நிறுத்துமிடம், சிற்றுண்டி விடுதி, வளாகத்திற்கு முன்புறம் கான்கீரீட் சாலை மற்றும் மருத்துவமனை முன்புறம் வளைவு முகப்பு ஆகியவை அமைத்துத்தர அரசின் இசைவினை பெற்று விரைவாக அவற்றை செய்து முடிக்க வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

			துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
			(5)	(6)
			வேலூர் மாவட்டம், அடுக்கம்பாறை அரசினர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் குழு பரிந்துரைத்துள்ள பணிகள் அரசின் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் துவங்கப்படும் எனவும் இது குறித்து மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10 அவர்களுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
49	74	193	தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் பயிர்நத்தம் மற்றும் கடத்தூர் ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதாகக் குழு அறிந்தது. அம்மருத்துவமனைகளுக்குச் சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

		துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
		(5)	(6)
		தருமபுரி மாவட்டம், பயிர்நத்தம் மற்றும் கடத்தூர் ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டடங்களுக்கான சுற்றுச் சுவர் கட்டும் பணிக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது, அரசின் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

வரிசை எண்.	பரிந்துரை எண்.	பத்தி எண்.	பரிந்துரைகளின் சுருக்கம்.
(1)	(2)	(3)	(4)
50	75	194	மேற்படி பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் உள்ள பொம்மல்லாபுரம், பூதநத்தம், முக்காசெட்டிப்பட்டி, இராமியணஹள்ளி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டப்பட வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

துறையின் பதில்	குழுவின் குறிப்புரை
(5)	(6)
தருமபுரி மாவட்டம், பொம்மல்லாபுரம், பூதநத்தம், முக்காசெட்டிப்பட்டி, இராமியனஹள்ளி ஆகிய இடங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கான கருத்துரு சுகாதாரத் துறையிடமிருந்து, அரசின் நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று, பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.	குழுவின் பரிந்துரையை நிறைவேற்றிட துறை தூரித நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

அ.மு.பி. ஜமாலுதீன்,
செயலாளர்.



அரசு மைய அச்சகம், சென்னை-600 079.